பக்கங்கள்-16 | 04.மார்கழி.2022 | விலை–50.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0774357193

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –392

## தமிழர் தாயகத்தில் இனவாதிகளின் எதிர்ப்பையும் மீறி மாவீரர்களுக்கு அஞ்சலி




## தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து பேச்சு வார்த்தைக்கு வருக ஜனாதிபதி ரணிலின் முட்டாள்தனமான கருத்து

## ஜெனீவா விவகாரம் மார்ச்சில் நடக்கப்போவது என்ன?



## தேசமாகச் சிந்திக்கும் சிங்கள ஆட்சியாளர்கள் ரணில் கையாளும் நகர்வு



முன்னாள் வடமாகாணசபையின் உறுப்பினர் துரைராசா ரவிகரன்

# தமிழர் தாயகத்தில் இனவாதிகளின் எதிர்ப்பையும் மீறி மாவீரர்களுக்கு அஞ்சலி

**கேள்வி: இந்த அசாதாரண சூழ்நிலையை நீங்கள் எடுத்துக்கொண்டால் மாவீரர் தினம் நவம்பர் 27 ஆம் திகதி இடம்பெற்று முடிந்திருக்கின்றது. அது உண்மையில் மக்களினுடைய எழுச்சி, அரசியல்வாதிகளினுடைய ஆதரவு, கட்சிகளினுடைய ஒருங்கிணைப்பு போன்ற விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. உண்மையில் நீங்கள் இந்த மாவீரர் தின எழுச்சியை எப்படி பார்க்கின்றீர்கள்?**

பதில் : நிச்சயமாக இதனை விடுதலைப்புலிகளின் காலத்தில் எழுச்சியாக மக்களினால் கொண்டாடப்பட்டு வந்தது. பின்பு இடைக்கிடை ஒவ்வொரு சிங்கள அரசியல் தலைமைகளும் ஒருவர் அனுமதிப்பார் ஒருவர் அனுமதிக்கமாட்டார் இப்படியான நிலையில் பெரிய நெருக்கடிக்குள் மக்கள் வெளியில் வந்து இதனை செய்யமுடியாத நிலை இருந்தபொழுதெல்லாம் தங்களுடைய இல்லங்களிலே அல்லது தங்களால் இயலக்கூடிய இடங்களிலே தாங்கள் மறைவாக இவர்களினது அட்டகாசத்துக்கு பயந்தும் நினைவேந்தலை செய்து தான் வந்தார்கள். அந்த நினைவேந்தல் என்பது மக்களுடைய மனங்களில் இருந்து அகற்ற முடியாது.

அப்படியான நிலையைத் தான் தற்பொழுது நடந்த மாவீரர் தினம் என்னும் அந்த நாளிலே நவம்பர் 27 ஆம் திகதியில் நடைபெற்ற பொழுதும் கூட சகல இடங்களிலும் மிக எழுச்சியாக காணப்பட்டது. ஒவ்வொரு இடத்தையும் நாங்கள் குறிப்பிட்டு சொல்வதானால் நேரம் எடுக்கும். இருந்தாலும் வடக்கு கிழக்கிலுள்ள சகல இடங்களிலும் மூளை முடுக்கிலெல்லாம் எங்கெங்கு விதைக்கப்பட்டதோ அங்கு எல்லாம் ஒவ்வொருவரும் தங்களுடைய உணர்வுகளுடன் சேர்ந்து அந்த இடங்களிலே விளக்கேற்ற வேண்டும் அவர்களை நினைவுகூற வேண்டும் அவர்களுக்கான பொங்கல் படையல் என செய்ய வேண்டும் மலர்களை கொண்டு அஞ்சலிசெய்ய வேண்டும் தீபம் ஏற்றி அஞ்சலிக்க வேண்டும் என்ற எண்ணங்களோடும் அந்த நினைவு நாளிலே கொடைகளை வழங்க வேண்டும் என்று தென்னங்கன்றுகளை வழங்கியும் இவ்வாறு மிகப்பெரிய எழுச்சியாக கொண்டாடப்பட்டது அனைவரும் அறிந்த விடயம். இந்த எழுச்சிகளை இவர்கள் அடக்க நினைத்தால் அவர்கள் தான் அடங்கிப்போக வேண்டி வரும் என்பதனை இதனூடாக சொல்லி வைக்க விரும்புகின்றேன். இது மக்களிடத்தே ஊறியஒரு நினைவு நாள். அந்த ஊறப்பட்ட நினைவுநாளிலே இறந்தவர்களை நினைவு கூறுவது மிகவும் பெறுமதியானதொன்று என எண்ணி அரசியல்வாதிகளோ அல்லது சிங்கள தலைமைகளோ இதற்கு மாறாக எண்ணிக்கொண்டிருப்பவர்கள் இந்த நினைவுநாளை தடுக்க கூடாது. உதாரணத்திற்கு முல்லைத்தீவிலே நான் ஒரு சம்பவத்தை சுட்டிக்காட்டுகின்றேன்.

பல இடங்களிலே நெருக்கடிகள் இருந்தது. 26 ஆம் திகதி 25 ஆம் திகதி அதற்கு முன்னரான கிழமைகளில் கூட நெருக்கடிகள் இருந்தது. முல்லைத்தீவிலே பொலிஸாரால் நான் உட்பட ஆறு பேரிற்கு அழைப்புவிடுத்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு நாங்கள் சென்றிருந்தோம். அப்பொழுது பொலிஸ் நிலையத்திலிருந்த மூன்று பேரிற்கு மேற்பட்ட உயர் அதிகாரிகள் அவர்களது கருத்தானது இந்த பயங்கரவாத தடைச்சட்டத்திற்கான தமிழ் மொழி மூலமிருந்த வர்த்தமானி அறிவித்தலை கொப்பி பன்னி அனைவரிற்கும் தந்து அதிலுள்ள வசனங்களை வாசித்துக்காட்டி ஒரு மிரட்டலை செய்கின்றார்கள் என்பது எங்களுக்கு தெரிந்தது. இதைத்தாண்டி நடைபெற்றால் இப்படியான சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டி வரும் என்ற கருத்தை புகுர்த்தியிருந்தார்கள். நாங்கள் அதனை நேரடியாக கேட்டிருந்தோம் இதற்கு முன்பு இப்படியான சம்பவங்கள் நடைபெறும் பொழுது அதாவது அனுகூஷ்டிக்கப்படும் பொழுது ஏதேனும் நடந்திருக்கின்றதா உங்களுடைய கட்டுப்பாடுகளை மீறி அல்லது மக்கள் தங்களது எண்ணத்திற்கு ஏதேனும் செய்தார்களா தங்களது எண்ணம் என்று நான் சொல்லவருவது முக்கியமாக விடுதலைப்புலிகளின் சின்னங்கள் கொடிகள் அப்படியான நடவடிக்கைகள் இருக்கக்கூடாது என்றவகையில் தான் அந்த வர்த்தமானியை வாசித்துக்காட்டி மிரட்டும் நோக்கில் செய்திருந்தார்கள். எனவே இப்படி நாங்கள் கேட்கின்ற பொழுது அப்படியொன்றுமில்லை ஏற்கனவே சரியாக தான் செய்தார்கள் என்றனர். எனவே அப்படித்தான் மக்கள் அனுகூஷ்டிப்பார்கள் அனுகூஷ்டிப்பதற்கு நீங்கள் மிரட்டல் இருப்பது அவ்வளவு சாத்தியமில்லை என்ற நிலைப்பாட்டில் தான் நாங்கள் பதிலை சொல்லிவிட்டு ஆறு பேரும் அந்த வர்த்தமானி அறிவித்தலை வேண்டிக்கொண்டு வந்திருந்தோம்.

இதில் நான் சொல்வது என்னவென்றால் எப்படித்தான் அடக்கியாள நினைத்தாலும் மக்கள் மனங்களிலிருந்து அந்த மாவீரர் தினத்தை தூக்கியெறிய முடியாது. மாவீரர் நாள் என்பது மக்கள் மனங்களிலே ஊறிப்போனதொன்று. அது எங்களது பிள்ளைகள் எங்களது உறவுகள் எங்களது உறவுகளை நினைத்து அந்த ஒருநாள் ஒருசொட்டு கண்ணீர் சிந்தி அந்த குறிப்பிட்ட நேரத்திற்கு அந்த இசையோடு சேர்ந்த வலி வேதனைகளை அகற்றும் நோக்கத்துடனும் மற்றும் பூசிக்கும் நோக்கத்துடன் தான் அவற்றை செய்து வருகின்றார்கள் எங்களது மக்கள் அந்த வகையிலே இந்த உணர்ச்சியோடு கூடிய இந்த நாளை மக்களின் மனங்களிலிருந்து அகற்றமுடியாது என்பது தான் என்னுடைய கருத்து.


**கேள்வி : தற்பொழுது ரணில் விக்ரமசிங்கவினுடைய ஆட்சி கடந்த நல்லாட்சியிலும் கூட மாவீரர்களுக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் போன்றன அஞ்சலிக்கப்பட்டது. எனவே ரணில் விக்ரமசிங்க அவர்கள் ஒரு இணக்கப்பாட்டை மேற்கொள்ளும் வகையிலே மறைமுகமான ஒரு ஆதரவை இதற்கு வழங்கியிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. இது உண்மை தானா?**

பதில் : இதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். ஏனென்றால் சிங்கள அரசியல்வாதிகள் நினைத்திருந்தால் எங்களுக்கான தீர்வுகளை ஒரு மென்போக்காக கொண்டு போய் தமிழர்களுக்கு தீர்வு கொடுக்க வேண்டும் எண்ணத்தோடு இவ்வளவு காலமும் காக்க வைக்க வேண்டிய அவசியமில்லை தீர்வை வழங்கியிருக்கலாம். ஆனால் ரணில் விக்ரமசிங்கவினுடைய கூற்று அநேகமானவர்களுக்கு நன்றாக தெரியும் இவர் பயங்கரமானதொரு அரசியல்வாதியோ அல்லது பித்தலாட்டக்காரனோ பொருத்தமான வசனத்தை அதில் போடலாம். இவரின் நடவடிக்கையானது தமிழ் மக்களுக்கு சாதகமாக சார்பாக இருக்கமாட்டாது என்பதனை நான் சொல்லுகின்றேன். ஏனென்றால் இவர் அப்படியான வேலைகளைத்தான் ஏற்கனவே செய்தவர். இவரின் நாடகம் அல்லது நடிப்புக்கள் எங்களுக்கு சாதகமாக வரும் என்பதை நாங்கள் எண்ணிக்கொண்டிருப்போமானால் அதைவிட பொருத்தமற்ற சொல்லு என்பது வேறில்லை என்று தான் நான் சொல்லுவேன்.

**கேள்வி : உங்களது கருத்தின்படி மக்கள் புரட்சிக்கு முன்னால் எதுவுமே நிற்கமுடியாது அடக்குமுறை தொடர்கின்ற பொழுது மக்கள் கிளர்ந்தெழுந்து தமக்கான ஒரு நிலைப்பாட்டை கொண்டு வருவார்கள் என்பது உங்களது கருத்தாடலாக இருக்கின்றது அப்படித்தானே?**

பதில் : ஆம் நிச்சயமாக நான் அதைத்தான் சொல்லுவேன். விடுதலைப்புலிகளினது காலத்திலே எங்களது மக்கள் தான் அதாவது விடுதலைப்புலிகள் வேறொரு நாட்டிலிருந்து வந்து இங்கு குதிக்கவில்லை. அவர்கள் வடக்கு கிழக்கு மக்களினுடைய பிள்ளைகள் தான். இவர்கள் ஏமாற்றி வந்த நடவடிக்கைகள் காரணமாகத்தான் விடுதலைப்புலிகள் தோன்றினது.

ஆனால் விடுதலைப்புலிகளோடு அரசாங்கமானது பேச்சுவாரத்தை நடத்தாமலிருக்கவில்லையே விடுதலைப்புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் ஒரு தீர்வை தமிழ் மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருந்து தான் பல சுற்றுப்பேச்சுக்கள் ஏற்கனவே நடைபெற்றது. இவ்வாறான நிலைமையில் இந்த மக்களின் ஊறல் அதாவது ஊறிப்போன இந்த தன்மையை மக்களிடமிருந்து அகற்ற முடியாது எந்தகாலத்திலும். அப்படியிருக்கும் பொழுது எங்களுக்கான ஒரு தீர்வை நிச்சயமாகத் தரத்தான் வேண்டும். இல்லாவிட்டாலும் தீர்வு தருகின்றார்களோ தரவில்லையோ ஆனால் எங்களது உணர்வுகளை ஒரு காலமும் எங்களது மக்களிடமிருந்து இவர்கள் பிரிக்க முடியாது பிரித்துப்பார்க்கவும் முடியாது அடக்கு முறையால் அடக்கவும் முடியாது என்பதை கூறி நிற்கின்றேன்.



**நேர்காணல் : இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

# தமிழ் கட்சிகளின் கூட்டு எதற்கு?

இன்று தமிழ் மக்களை பிரதிபலிக்கின்ற தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்பது பேசுபொருளாக மாறியுள்ள அதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதனையே வலியுறுத்தியுள்ளார். இது ஒரு சிக்கலான விடயம் என்பது அவருக்கு தெரியும். காரணம் தமிழ்த் தேசியப் பரப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமை போன்று இன்றைய தலைமைத்துவம் இல்லாத நிலையிலேயே தற்பொழுது தமிழ் தரப்பில் கட்சிகளின் நிலை காணப்படுகின்றது.

ஆகவே தமிழ் தேசியம் பேசுகின்ற கட்சிகளாவது ஒரு குடையின் கீழ் ஒன்றிணைவது மிகவும் அவசியமானது. தமிழ் கட்சிகளின் கூட்டு எதற்கு என்கின்ற கேள்விகள் ஏன் தமிழ் தரப்பில் எழுப்பப்படுகின்றன. ஏன் தமிழ் தரப்பே இது சாத்தியமற்றது என்றுகூறுகின்றது. இதனை சாத்தியப்படுத்தினால் விடுதலைப்புலிகளின் தலைமைத்துவம் இருந்த காலகட்டத்தில் 22 பாராளுமன்ற உறுப்பினர்களை தமிழ் தரப்பு தக்கவைத்தது போன்ற நிலைமை உருவாகும். அவ்வாறு உருவாக்கப்பட்டால் அரச தரப்பிற்கு பாரிய நெருக்கடியை இலங்கைத்தீவில் அது ஏற்படுத்தும் என்ற காரணத்தினால் அரச கைக்கூலியாக செயற்பட்டு வருகின்ற ஒரு சில தமிழ் கட்சிகள் தமது சுயநல அரசியலை கொண்டு செல்ல முடியாது என்பதே யதார்த்தபூர்வமான உண்மை. ஆகவே அரசியல் தீர்வு திட்டத்திற்காவது தமிழ் தரப்பு ஒரு கூட்டை உருவாக்குவது சிறந்தொன்றாகும்.

தமிழினத்திற்கான தீர்வு குறித்துப் பேசும் வடகிழக்கு தமிழ் அரசியல்வாதிகளில் பலர் அரசின் ஒட்டுண்ணிகளாக இருக்கின்றனர். இவர்களால் தமிழினத்திற்கான பயன் என்ன?. இவர்களால் அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுத்து தீர்வினைகக் காண முடியுமா? தமிழர் பிரதேசங்களில் நாளுக்கு நாள் அரசின் அத்துமீறல்கள் இடம் பெற்று வருகின்றது. இன்றும் வீதிகளில் போராட்டங்கள் இடம்பெறுகின்றது.

பௌத்த மயமாக்கல் வடகிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களில் தொடர்ந்தும் நடைபெறுகின்றது. பல பிரச்சினைளுக்கானத் தீர்வினைக் கோரி நிற்கும் தமிழினம் ஒற்றுமை என்கிற விடயம் தொடர்பில் இதுவரை சிந்தித்து ஆக்கபூர்வமாகச் செயற்படாதது ஏன்? வெறுமனே தேர்தல் மேடைக்காக, அறிக்கை வெளியிடுவதற்காக மாத்திரம் தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கவேண்டும். தமிழ்க் கட்சிகள் உங்களுக்குள் இருக்கும் பேதங்களை களைந்துவிட்டு தமிழினத்தின் விடிவுக்காக ஒரே கொள்கையில் ஒன்றுபட வேண்டும்.

தமிழ் அரசு கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி இதில் ஒன்றை தெரிவுசெய்து தமிழ் தரப்பு செயற்படுமாக இருந்தால் மாத்திரமே எமது தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். அரச தரப்பிற்கு வக்காளத்து வாங்குகின்ற தமிழ் கட்சிகள் பலதும் அகற்றப்படவேண்டியவர்கள் என்பதே பொருள். இன்றைய அரசியல் சூழல் என்பது ஆப்பிழுத்த குரங்கின் கதையாய் மாறியுள்ளது. ஆப்பிற்கு கட்டைவைத்து அதில் இருந்து தப்பிக்கொண்டால் மாத்திரமே தமிழ் தரப்பு சிங்கள தரப்பினரின் அரசியல் பிடிக்குள் இருந்து மீண்டு எழ முடியும். அல்லாதுபோனால் தமிழ் இனமும் ஒரு மக்கள் புரட்சியை கையில் எடுக்க நேரிடும். அப்போது அரசியல்வாதிகள் தலைதெறிக்க ஓடுகின்ற நிலைமை உருவாக்கப்படும். ஆகவே சிந்திப்போம் செயற்படுவோம்.

# 197 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



இதன்போது எங்களிடமுள்ள யுத்த வாகனங்களினதும்அதனது ஆயுதங்களினதும் அனுகூலம் பயன்பாடற்றதாக மாறுகின்றது. இவ்வாறே மே 1 ஆம் நாள் 1986 ஆம் ஆண்டில் பான்ஜேரிலும் 31 டிசம்பர் 1994 ஆம் ஆண்டு குறோஸ்னியிலும் மார்ச் 1996 ஆம் ஆண்டு யாரிஸ் - மார்டியிலும் நடந்தது.

இவ்வாறான சமரில் தலைப்படையை வேகமாக நகரச்செய்தல் மறைப்பிலிருக்கின்ற எதிரியை ஒடுக்க உதவக்கூடிய சகல வகை ஆயுதங்களையும் சூட்டுத்தாக்குதல் எதிர்பிற்காக ஒழுங்குபடுத்தல் ஆகியவற்றின் மூலம் எமது தரப்பினரின் வெற்றிவாய்ப்பைச் சமனாக்கலாம். இதற்கு ஆட்டிலறி நேர்ச் சூடுகளை மேற்கொள்வதே மிகப்பொருத்தமான முறையெனச் சொல்லலாம்.

ஏப்ரல் 1987 ஆம் ஆண்டு 201 ஆவது யுத்த வாகனங்களைக் கொண்ட தரைப்படை டிவிசனின் கட்டளையாளன் கேணல் ஸெகோவ்சவ் தெற்கு பக்லானிலுள்ள பலப்படுத்தப்பட்ட பிரதேசத்தைத் தாக்கியபோது தாக்குதல் பற்றாலியனுக்கு நேரடிச் சூட்டை மேற்கொள்ளும் நிலையில் 152 மி.மீ சுய நகர்வு ஆட்டிலறி 'கருவேல்' ('அக்காசியா') இன் இரண்டு பற்றிகளைக் கொடுத்துப் பலப்படுத்தினார். சன்ன - வெடிமருந்தைக் கொண்ட எறிகணைகளின் வெடிப்பினால் சுவர்களில் எந்தவித சிரமமுமில்லாமல் ராங்கிகள். பி.எம்.பி போன்றன செல்லக்கூடிய அளவிற்குத் துவாரங்கள் ஏற்பட்டன. அத்துடன் எறிகணைகள் எதிரியின் சகல எதிர்ப்பு நிலைகளையும் ஒடுக்கி கடமையை வெற்றிகரமாக நிறைவேற்றவும் உதவின. ஆனால் இந்தச் சமரின்போது முஜாகுதீன்களின் தற்காப்பு நிலைகளுக்கும் எங்களது நிலைக்கும் இடைப்பட்ட தூரம் 700 - 900 வரையான மீற்றராக இருந்ததோடு சுயநகர்வு ஆட்டிலறிக்கு எதிரியின் எறிகளையாளர்களின் சூட்டெல்லைக்குள் அகப்படாத தூரமாகவும் இருந்தது. துரதிஸ்டவசமாக இன்றுள்ள எங்களது எதிரி மேற்குறித்த முறையில் அவனை அழிக்க இடம் தருமளவிற்கு முட்டாளல்ல.

தீர்வு தான் என்ன? எனது அனுபவத்தை ஆய்வு செய்ததன் பிரகாரம், கெரில்லாக்களுடன் சமரிடுவதற்குத் தயார்ப்படுத்துகின்ற சகல கட்டளையாளர்களுக்கும் பொறுப்பாளர்களுக்கும் நான் பரிந்துரைப்பது என்னவென்றால் முதலாவதாக பாரியளவிலான எண்ணிக்கையில் ஆளணிகளைப் பயன்படுத்தி மேற்கொள்கின்ற பெருமெடுப்பிலான படை நடவடிக்கைகளைக் குறைந்தளவாக்க வேண்டும். மிகவும் பொருத்தமானது சிறியளவிலான குழு அதாவது 3 - 4 பேர்களைக் கொண்ட வேவுக் குழுவாகும். சிறிய பரிமாணத்தைக் கொண்ட நம்பகரமான நிலையறிதல் மற்றும் தொடர்புக் கருவிகளைக் கொண்டதாகவும் தங்களது ஆளணியில் ஆட்லறிப் படைப்பிரிவுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்ற ஆட்டிலறிச் சூட்டுத் திருத்தலாளனை அல்லது விமானப்படையினருடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்ற விமானப்படைச் சூட்டுத் திருத்தலாளனைக் கொண்டதாகவும் இக்குழு இருக்க வேண்டும். இவர்களது பணி யாதெனில் எதிரியைக் கண்டுபிடித்து அவனுடன் சமரிடுவதைத் தவிர்த்து ஆட்டிலறியினதும் விமானப்படைச் சூட்டினதும் அதியுயர் வினைத்திறன் மிக்க தாக்குதலினால் அவனை அழிப்பதற்கு உதவிசெய்தலாகும்.

இரண்டாவதாக கனரக வாகனமயமாக்கப்படுத்தப்பட்ட பிளாட்டூனின் அணிக் கட்டமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். அதாவது ஆர்.பி.ஜி - 7 ஆயுதத்தைக் கொண்ட எறிகணை செலுத்தல் செக்சனை அதனுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான மாற்றத்துடன் பிளாட்டூனிலுள்ள எறிகணை செலுத்தலாளர்களின் எண்ணிக்கை ஆறாக எட்டுவதுடன் இப்படைப்பிரிவின் சூட்டு வலிமைக் கிட்டத்தட்ட 82 மி.மீ பின்னுதைப்பற்ற ராங்கியெதிர்ப்புப் பீரங்கிப் பற்றியின் தரத்திற்கும் உயர்த்துகின்றோம். ஆர்.பி.ஓ. 'ஸ்மேல்' அல்லது ஜி.பி. - 25 அல்லாமல் ஏன் ஆர்.பி.ஜி - 7?

ஏனெனில்ஒன்றுக்கொன்றுஒருமித்தபண்பைக் கொண்டிருந்தாலும் ஆர்.பி.ஓ. பிரதான குறைபாடொன்றைக் கொண்டிருக்கின்றது. அது யாதெனில் ஒரு தடைவை மாத்திரமே பயன்படுத்துதலாகும். ஆனால் சூட்டுத் தாக்குதல் நிலைமைகளில் முதலாவது சூட்டிலேயே இலக்கை அழிப்பது மிகவும் சிரமமாகும். வழக்கமாகத் தொலைவிலுள்ள இலக்கை நேரடிச்சூட் மூலம் அழிப்பதற்கு இரண்டு சூடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் முதலாவது சூடு சூட்டுத் திருத்தத்திற்கான பரிசோதனைச் சூடாகும். இதன்பின் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அழிப்பதற்கான சூடு மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறான சூழ்நிலைகளில் ஆர்.பி.ஓ. வினால் இலக்கை அழிப்பதற்கு 22 கி.கி. காவிச்செல்கின்ற ஆயுதம் தேவைப்படுகின்றது. ஆனால் ஆர்.பி.ஜி இனால் அழிப்பதற்கோ 5 கி.கி. (ரண்டு பி.ஜி. - 7பி இனது நிறை) தேவைப்படுகின்றது. இதற்கு மேலதிக அனுகூலமான ஆர்.பி.ஓ. வினது திறந்த குறிகாட்டிகளின் மேல் பொருத்தப்படுகின்ற பி.ஜி.ஓ. - 7 ஒளியியல் குறிகாட்டியையும் சேர்த்துக்கொண்டால் நிறை எவ்வாறிருக்கும். அத்துடன் இந்த எறிகணைகளிடையே காணப்படுகின்ற விலை வித்தியாசத்தையும் கருத்திலெடுக்க வேண்டும். பி.ஜி. - 7 கிட்டத்தட்ட 100 டொலர்களாகும். இதன் மூலம் கணிசமானளவு நிதியையும் மிச்சப்படுத்தலாம். இதுவே இன்றைய ரசியாவிற்கு மிகவும் முக்கியமானதாகவும் இருக்கின்றது.

ஆர்.பி.ஜி. - 7 இனது சூட்டினால் இலகு கவச இலக்குகளை அழிக்கும் வினைத்திறன் 0.3 என எங்களது இராணுவ அறிமுறை விற்பன்னர்கள் கருதுகின்றார்கள். இதன் அர்த்தம் யாதெனில் சமரொன்றில் பி.எம்.பி., பி.ரி.ஆர். போன்றவற்றை எறிகணை செலுத்தியால் அழிப்பதற்கு மூன்று சூடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். வழக்கமாகக் கிளர்ச்சியாளர்களால் பயன்படுத்தப்படுகின்ற மறைப்புக்கள் கவச இலக்குகளைப் போன்ற காப்பைக் கொண்ட சுடுகலன் சன்ன எதிர்ப்புக் கவசத்தைக் கொண்டவையாகும். இவற்றைச் சுடுகலன்களால் சுடுவதைக் கவச இலக்குகளைச் சுடுவதற்கு ஒப்பிடலாம். செக்சனொன்றில் ஆறு ஆர்.பி.ஜி. எறிகணை செலுத்திகளும் அதற்கான ஆறு எறிகணைகளும் ஆயுத உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டதாக இருக்குமானால் அது முன்னேறித் தாக்குதலொன்றில் ஈடுபடுகின்ற கவசவாகனக் காலாட்படைப் பிளாட்டூனின் பணிக்குச் சமனானதாகின்றது.

செச்னியப் பிரிவினைவாதிகள் தங்களது அனுபவத்தின் வாயிலாகப் பின்வரும் விடயத்தை விளங்கிக்கொண்டுள்ளனர். அதாவது நகர்ப்புறச் சமரில் (அவர்களால் பெரிதும் விரும்பப்படுகின்ற சமர்) ஏதாவதொரு கணிசமான வெற்றியைப் பெறுவதென்றால் எந்த இலக்காயினும் அதனை ஒன்றுகுவிந்த ராங்கியெதிர்ப்பு எறிகணைத் தாக்குதலால் மாத்திரமே ஒடுக்கலாம் என்பதாகும். இதற்கும் மேலாக அவர்கள் தங்களது அனுபவத்தினால் வெவ்வேறு வகை இலக்குகளுக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் எறிகணைகளில் தாங்களாகவே மாற்றங்களையும் செய்தனர்.

ராங்கியெதிர்ப்பு எறிகணைகளுக்குள் பெற்றோலை நிரப்பி அவற்றின் தலைப்பகுதியில் 400 கிராம் எடை கொண்ட இரு ரி.என்.ரி. வெடிமருந்துக் கட்டிகளை இணைத்து விடுகின்றனர். இவ்வாறான கண்டுபிடிப்புக்களின் வினைத்திறனை எடை போட்டுக் கூறுவது கடினமாகும். இவ்வாறான சன்னத்தாக்கமற்ற எறிகணைகளின் இலக்குத் தாக்கல் தூரம் 50 மீற்றரிற்கு அப்பால் என்றால் அது பிரச்சினையே. ஆனால் இவ்வாறான எறிகணைகளால் அரச படைகளின் நிலைகள் மீது தாக்குதல் தொடுப்பதால் ஏற்படுகின்ற உளவியல் விளைவு (தாக்கம்) சந்தேகத்திற்கிடமின்றி மிகவும் உயர்ந்ததாகும். ஆர்.பி.ஜி களுக்குரிய எறிகணைகளாகச் சன்னத்தாக்கம் கொண்ட எறிகணைகள் எரியூட்டல் எறிகணைகள் போன்றவற்றை படைக்கலன்களில் சேர்த்துக்கொள்வதன் அவசியம் பற்றி எங்கள் நாட்டில் நீண்ட காலமாகப் பேச்சுக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் இங்கே நாங்கள் ஜெனீவா உடன்படிக்கையில் வந்து முட்டுப்படுகின்றோம். அவ்வுடன்படிக்கையில் காவிச்செல்கின்ற ஆயுதங்களிலிருந்து சூட்டை மேற்கொள்ள அதற்குப் பயன்படுத்தப்படுகின்ற சன்னத்தாக்கம் கொண்ட வெடிபொருட்களிலுள்ள வெடிமருந்து 400 கிராமாக மட்டுப்படுத்தப்படுகின்றதுடன் எரியூட்டல்ஆயுதங்களையும்மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயன்படுத்தும்படியும் கூறப்படுகின்றது. உண்மையில் இந்த வரையறைகள் இரட்டைத்தாக்கச் செயற்பாடு கொண்ட வெடிபொருட்களில் கடைப்பிடிக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக உட்புக இடைவெளியுடன்கூடிய கூம்பு வடிவ ராங்கியெதிர்ப்பு எறிகணையின் தாக்குதல் தலை உலோகத்தால் மூடப்பட்டிருத்தல் அல்லது நேபாமோ தேமோவோ நிரப்பப்பட்ட சமிக்கை - ஒளியூட்டல் (பரா) எறிகணை ஆகும்.

சுடுகுழலுக்குக் கீழே பொருத்துகின்ற எறிகணை செலுத்திகள் சுடுகலன் எறிகளைகள் போன்றவற்றின் சமர்ப் பயன்பாட்டைப் பற்றிக் கூறுகின்றபோது அவற்றிலுள்ள பிரதான குறைபாட்டைக் குறிப்பிடவேண்டியது அவசியமாகின்றது. குறிபொருத்தி சூட்டை மேற்கொள்வதிலுள்ள சிரமமும் அவற்றிலுள்ள வெடிமருந்தின் குறைந்த வலிமையுமே அதுவாகும். இவ்வகை ஆயுதங்களின் சமர்ப் பயன்பாட்டில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்கும் தெரியும். வி.ஓ.ஜி - 25, ஜி.பி. - 30 அல்லது சுடுகலன் எறிகணையின் சூட்டினால் எதிரியை வினைத்திறனுடன் அழிப்பதானால் எறிகணை நேராக அவனது உச்சந்தலையில் விழுந்தால் மாத்திரமே (ஆனால் எதிரி தலைக்கவசம் அணியாமலிருக்க வேண்டும்)

தொடர்வான்....

# தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து பேச்சு வார்த்தைக்கு வருக ஜனாதிபதி ரணிலின் முட்டாள்தனமான கருத்து

## ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்

**கேள்வி : இன்றைய சமகால அரசியல் பார்வையிலே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஒரு கருத்தை தெரிவித்திருக்கின்றார். தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து வந்தால் நான் பேசத்தயாராக இருப்பதாகவும் அல்லது அதற்கான ஏதோவொரு வகையிலே அவர்களுக்கான தீர்வை கொடுப்பதற்கும் தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கின்ற இந்த நிலையிலே தமிழ் கட்சிகள் எப்படியிருக்கின்றன. அவ்வாறு ஒன்றிணைவதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பது பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

பதில் : முதலாவது ரணில் விக்ரமசிங்க மாதிரியான ஒரு முட்டாள்தனமான கருத்துக்களை சொல்லக்கூடிய ஒருவரை கண்டுபிடிப்பது முதலாவது கடினமானது. இதனை நான் சொல்வது ஏனென்றால் ஆரம்பத்தில் நீங்கள் கூறியது போன்று வடக்கு மாகாண தமிழ் மக்களது பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் என்று அதில் அவரது கருத்து கூறப்பட்டது. வடக்கு தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சனை காணாலாக்கப்பட்டோரின் பிரச்சனை காணிப்பிரச்சனை என்று சொல்லும் பொழுது அது கிழக்கு மாகாணத்திலுள்ளவர்களுக்கும் அதே பிரச்சனை இருக்கின்றது.

ஆனால் பிற்பாடு தமிழ் மக்களது பிரச்சனைக்கு நாங்கள் எல்லோரும் தீர்வு காண வேண்டும் என்று நீங்கள் தயாரா? நீங்கள் தயாரா? என்று பாராளுமன்றத்தில் எல்லோரையும் பார்த்துக்கேட்டு வரவு செலவுத் திட்டம் முடிந்தவுடன் இதுபற்றி நாங்கள் பேசலாம் என்ற கருத்துக்களும் சொல்லப்பட்டது. எல்லோரும் அதை நம்பினார்கள் ரணில் விக்ரமசிங்க அவர்கள் இனப்பிரச்சனையை தீர்க்கப்போகின்றார் பேசப்போகின்றார். அதன் காரணமாக சம்மந்தன் ஐயா அவர்கள் எல்லோரையும் அழைத்திருந்தார்.

தமிழ் தேசிய பரப்பிலுள்ள பல கட்சிகள் கொழும்பில் சந்தித்து பேசினார்கள். ஆனால் அன்றைய தினம் பாராளுமன்றத்தில் பார்க்கின்றபொழுது மாவட்ட அபிவிருத்தி சபையை கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன் என்று ரணில் விக்ரமசிங்க கூறுகின்றார். எனவே எனக்கு இருக்கக்கூடிய உண்மையானதொரு கேள்வி முதலாவது அவர் இந்த நாட்டினுடைய ஜனாதிபதி அவர் இந்த நாட்டின் நீண்டகால பாராளுமன்ற உறுப்பினர் பிரதமராக இருந்தவர் தமிழ் மக்களின் பிரச்சனைகள் எல்லாம் அறிந்தவர் அவர் உண்மையில் என்ன சிந்தனையில் இருக்கின்றார். மாவட்டசபையா. மாகாணசபையா அதற்கு மேலாக ஏதும் இருக்கின்றதா அதைப்பற்றி யோசிக்கின்றாரா? உண்மையாகவே பிரச்சனையை தீர்க்க விரும்புகின்றாரா? இல்லையெனில் பிரச்சனைகளை திசை திருப்புவதற்கு முயற்சிக்கின்றாரா? இவ்வாறு பல கேள்விகள் நிச்சயமாக இருக்கின்றது.

ஏனெனில் ரணில் விக்ரமசிங்க அவர்கள் நீதியாகவும் நேர்மையாகவும் தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்காகவல்ல இன்று நாட்டில் இருக்கக்கூடிய மிக மோசமான பொருளாதார சூழ்நிலையில் சர்வதேச சமூகத்திற்கு அவர் ஒரு பதத்தை காட்ட விரும்புகின்றார். நாங்கள் தமிழ் மக்களுடன் பேசுகின்றோம் பிரச்சனையை தீர்க்க விரும்புகின்றோம். ஆகவே புலம்பெயர் தமிழ் மக்களிடம் முதலீடு செய்யலாம் போன்ற பல்வேறுபட்ட கருத்துக்களை வெளிஉலகிற்கு கொண்டு செல்ல விரும்புகின்றார். அதன் காரணமாக ஒரு முரண்பட்ட நிலையில் ஒவ்வொருநாளும் அவருடைய கருத்துக்கள் ஒன்றுக்கொண்டு முரண்பட்ட நிலையில் தான் என்னைப்பொறுத்தவரையில் காணப்படுகின்றது.



எனவே மீண்டும் நான் நம்புகின்றேன் அவர் எங்களை இன்னுமொரு முறை ஏமாற்றுவதற்காக செயற்படுகின்றார்கள் என்று தான் தோன்றுகின்றது. இதனுடைய பொருள் ஜனாதிபதியுடன் பேசக்கூடாது என்பதல்ல ஆனால் ஜனாதிபதி உங்களுக்கு ஏற்கனவே தெரியும் இந்த ஐந்து தமிழ் கட்சிகள் அதாவது ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, ரெலோ, புளொட், தமிழரசுக் கட்சி போன்றவை ஒன்று கூடி நாங்கள் மூன்று முக்கியமான விடயத்தை கூறியிருக்கின்றோம். ஒன்று வடகிழக்கில் காணிகள் பிடிக்கின்ற விடயங்களை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இரண்டாவது பிடிக்கப்பட்ட காணிகள் திரும்ப அந்தந்த மக்களிடம் ஒப்படைக்க வேண்டும். இதுவொரு முக்கியமான முதலாவது பிரச்சனை. உண்மையில் இனநல்லிணக்கம் பிரச்சனைகள் தீர்க்க வேண்டும் என்று அரசு விரும்பினால் ஜனாதிபதியினால் இதனை நிவர்த்தி செய்ய முடியும். எமது ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தனது அமைச்சர்களை அழைத்து உடனடியாக சகல நடவடிக்கைகளையும் வடகிழக்கில் செய்யும்படி அவர் கேட்க முடியும். அதாவது காணிகளை பிடிக்கும் நடவடிக்கைகளை நிறுத்தாங்கள். இரண்டாவது பிடிக்கப்பட்ட காணிகள் யார் யாரிற்கு சொந்தமோ அவர்களுக்கு அவற்றை மீள ஒப்படைப்பது என்பது இன்னொரு விடயம். இரண்டாவது விடயம் உண்மையாகவே தமிழ் மக்களது பிரச்சனைகளை தீர்ப்பதற்கு முன்பாக தற்பொழுது எமது அரசியல் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த 13வது திருத்தம் அரசியல் அதிகாரங்களை பகிர்ந்துகொள்வது. உடனடியாக 1988 ஆம் ஆண்டு எவ்வாறு இந்த 13 ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டதோ அதில் என்ன விடயங்கள் எல்லாம் உள்ளடக்கப்பட்டதோ அதனை நிறைவேற்றுவது.

ஆகவே இவற்றை குறைந்தபட்சம் செய்வார்களாக இருந்தால் தேசிய இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு இவர்கள் விரும்புகின்றார்கள் என நாங்கள் நம்பலாம். இது அவர்கள் செய்ய மறுத்தால் இதனையே செய்ய முடியாத பொழுது எப்படி தேசிய இனப்பிரச்சனையை தீர்க்க முடியும். ஆகவே தான் நாங்கள் அந்த ஐந்து கட்சிகளில் இணைந்து இந்த கோரிக்கைகளை அவர்களுக்கு நாங்கள் முன்வைத்திருக்கின்றோம் என்பது ஒரு விடயம் எம்மை பொறுத்தவரை தற்பொழுது குறைந்தபட்சம் இந்த தமிழ் மக்களுடைய கோரிக்கைகள் ஒரே குரலில் ஒலித்தாக வேண்டும் என்ற காரணத்திற்காக தமிழ் கட்சிகள் நாங்கள் ஒன்றுபட்டு பேசியிருக்கின்றோம். இதற்கு மேல் இருக்கின்ற ஏனைய கட்சிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்றும் விரும்புகின்றோம். அந்தவகையில் ஏனைய கட்சிகளும் நிச்சயமாக இணைந்துகொள்ள முடியும். அதன் மூலம் தமிழ் மக்கள் தங்களது கோரிக்கைகளை ஒரே குரலில் வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியும். நான் நம்புகின்றேன் இதுதான் காலத்தினுடைய தேவை தீர்வுகள் எப்பொழுது வரும் என்பது பற்றி யாருக்கும் தெரியாது கவலைப்படவும் தேவையில்லை. இன்று தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நாங்கள் ஒன்றுபட்டு செயற்படுவது என்பது காலத்தின் அவசியம் என்று நான் கருதுகின்றேன்.



**கேள்வி : தீர்வு திட்டம் என்ற அடிப்படையிலே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினுடைய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதாக ஊடகங்களில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

பதில் : இதுவரையில் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வுதிட்டமாக அவர் எதனையும் முன்வைக்கவில்லை. இவர் முன்பு நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக இருந்த பொழுது 83 முறை தாங்கள் கூடிப்பேசியதாக கூறி பாராளுமன்றத்தில் அவற்றை சமர்ப்பிக்கப்பட்டு பிற்பாடு அவை அனைத்தும் குப்பையில் போடப்பட்டது. எனவே தற்பொழுது புதிய பேச்சுவார்த்தைகள் புதிய விடயங்கள் சந்திரிக்காவினுடைய புரபோசல் இருக்கின்றது இப்படி பல்வேறுபட்ட அறிக்கைகள் ஏற்கனவே அரசாங்கத்தின் பக்கம் இருக்கின்றது. இந்த நிலையில் ஏற்கனவே பலர் கூறியது போன்று தமிழர் தரப்பும் அரசாங்கமும் ஒரு வாரம் கூடி பேசி இந்த விடயங்களை ஒரு முடிவுக்கு கொண்டுவர முடியும். சிங்கள தரப்பில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிச் தலைவர்களுடன் இணைவார்களாக இருந்தால் இதனை சாதிக்க முடியும் ஆனால் இதனை இவர்கள் சாதிப்பார்களா? என்பது பெரிய கேள்வி.

**நேர்காணல் : கூழியோடி**

## ‘பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்றுவரை இளமை குன்றாமல் உயிருடன் இருந்து அரச எதிர்ப்பாளர்களையும், விமர்சிப்பவர்களையும் வேட்டையாடி வருகிறது.’

# ஜெனீவா விவகாரம் மார்ச்சில் நடக்க போவது என்ன?

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், தொடரும் மனித உரிமை மீறல்கள், குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை விலக்கு, சிவில் சேவைகளில் இராணுவ மயம், வடக்கு, கிழக்கில் சிங்கள பௌத்தமயப்படுத்தல், சிவில் அமைப்புகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் கண்காணிப்புக்கு உட்படுத்துதல், போராட்டக்காரர்கள், தொழிற்சங்க, மாணவர் தலைவர்கள் என்போர் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பிரயோகித்தல், போர்க் குற்றவாளிகளை உயர் பதவிகளில் அமர்த்தல் போன்ற மனிதகுல விரோத நடவடிக்கைகள் நல்லிணக்க உருவாக்கத்திற்குப் பெரும் தடையாக உள்ளன என அந்த அறிக்கையில் மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளையில் அவ்வறிக்கை மூலம் அவர் சர்வதேச நாடுகளிடம் ஒரு முக்கியமான கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அதாவது இலங்கையில் தற்போது பயனுள்ள பொறுப்புக் கூறல் தெரிவுகள் இல்லாத நிலையில் சர்வதேச சட்டத்தில் பொறுப்புக் கூறலை முன்னெடுப்பதற்கு வெளிநாட்டு மற்றும் உலகளாவிய வரம்பின் அடிப்படையில் மாற்று உபாயங்களை பின்பற்றுமாறு அவர் சர்வதேச நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். சட்டத்தின் ஆட்சி, நல்லெண்ணம், நிலையான அமைதி என்பன நிலை நிறுத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதில் முக்கியமாக நாம் அவதானிக்க வேண்டிய விடயம் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற சர்வதேச நியமங்களுக்கு ஒவ்வாத சட்டங்களின் பிரயோகம், போர்க் குற்றவாளிகள் உட்பட்ட குற்றவாளிகளுக்கு தண்டனை விலக்கு, போர்க் குற்றம் புரிந்த படையினருக்கு உயர் பதவிகள், தமிழ், முஸ்லிம் மக்கள் மீதான மத, இன ஒடுக்குமுறைகளின் அடிப்படையில் காணி, மத ஆக்கிரமிப்பு போன்ற அரசாங்கத்தால் அல்லது அரசாங்க அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் முறைகேடுகள் பற்றி சர்வதேச மட்டத்தில் உலகளாவிய வரையறைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே அவர் அழைப்பின் அர்த்தமாகும். மேற்படி குற்றங்களில் ஈடுபட்டவர்களின் வெளிநாடுகளிலுள்ள சொத்துக்கள் முடக்கப்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஆணையாளரின் அறிக்கையை அடியொற்றி அமெரிக்கா, பிரிட்டன், மாலாவி, ஜேர்மனி, மொண்டேனிக்கா உள்ளிட்ட இணைஅனுசரணை நாடுகள் பிரேரணையாக ஒரு வரைவை முன்வைத்துள்ளன. இவ்வறிக்கை விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டுப் பின்பு திருத்தங்களுடன் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்படும்.

அதேவேளையில் சர்வதேச மன்னிப்புச் சபை, ஆசியா ஃபோரம், மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச நீதியாளர்கள் அமைப்பு ஆகிய நான்கு முக்கிய மனித உரிமைகள் அமைப்புகள் ஆணையாளரின் அறிக்கை பயனுள்ள வகையில் நிறைவேற்றப்படவேண்டுமென மனித உரிமைகள் ஆணையகத்திற்குக் கடிதம் எழுதியுள்ளன. குறிப்பாக இலங்கைக்குள் பொறுப்புக் கூறல் இல்லாத நிலையில் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட இலங்கையர்களை சர்வதேச நீதிமன்றங்களில் விசாரணை செய்யவேண்டும் எனவும், வெளிநாடுகளில் உள்ள திருடப்பட்ட சொத்துக்களைக் கண்டு பிடித்து முடக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும் அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது முக்கிய விடயமாகும். பிரிட்டனும் இப்படியான ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளதுடன், அமெரிக்க செனட்டர்களும் இவ்வாறான கருத்துக்கொண்ட ஒரு பிரேரணையை முன்மொழிந்துள்ளனர். குற்றமிழைத்த இராணுவத்தினர் உட்பட குற்றமிழைத்தாகக் கருதப்படும் இலங்கையர்கள் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்படவேண்டுமென நேரடியாகச் சுட்டா விட்டாலும் சர்வதேச விசாரணைக்கான அழுத்தங்கள் வலுப்பெற்றிருப்பதைக்காணமுடியும். இவ்வாறு இலங்கையின் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள், இராணுவமயமாக்கல், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குத் தண்டனை விலக்கு, பயங்கரவாதத் தடைச் சட்டப் பிரயோகம் என்பன மனித உரிமைகள் பேரவையிலும் உறுப்பு நாடுகள் மத்தியிலும் பிரதான பேசுபொருளாக மாறி சர்வதேச விசாரணை பற்றிய கோரிக்கைகள் எழுந்துள்ள நிலையில் இலங்கை அவற்றுக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்து வருகிறது.

இலங்கையின் சார்பில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் அல் சப்ரி அவர்கள் இலங்கை மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்தை நிராகரிக்கிறதெனவும், சர்வதேசப் பொறிமுறை மூலமான விசாரணை இலங்கையின் அரசியலமைப்புக்கு ஏற்புடையதல்ல எனவும், ஒரு இறைமையுள்ள நாடு என்ற வகையில் உள்நாட்டுப் பொறிமுறை மூலம் விசாரணைகளை மேற்கொள்ள முடியுமெனவும் தெரிவித்துள்ளார். எப்படியிருப்பினும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கைக்குச் சார்பான ஒரு தீர்மானமே நிறைவேற்றப்படக்கூடிய அறிகுறிகளே இப்போது தென்பட்டுக் கொண்டிருக்கின்றன. அப்படி நிகழுமாயின் அடுத்த கட்ட நகர்வு எப்படியிருக்குமென்பதே இப்போது எழும் கேள்வியாகும்.


இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 13 ஆண்டுகளாகி விட்டன. இக்காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பாக 30/1 தொட்டு 46/1 வரையான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட காலப்பகுதியில் மஹிந்த ராஜபக்ஷ், ரணில் விக்கிரமசிங்க - மைத்திரிபால சிறிசேன, கோத்தபாய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆட்சியதிகாரம் நிலவியது. ஆனால் இவர்கள் எவரதும் ஆட்சியிலும் எந்தவொரு தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் போர்க்குற்றவாளிகளை இனங்காணவும், மனித உரிமை மீறல்களைக் கண்டறியவும் நல்லிணக்க ஆணைக்குழு நிறுவப்பட்டது. நாட்டின் பல பாகங்களிலும் அமர்வுகள் நடத்தப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏராளமான செலவில் பெருமளவு மனித சக்திகளை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்பு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

காணாமற் போனோர் விவகாரம் தொடர்பாக விசாரணை செய்ய பரணகம ஆணைக்குழு அமைக்கப்பட்டு அமர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. காணாமற்போனோரின் உறவுகள், இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் துணை இராணுவக் குழுக்கள் ஆகியோரின் கடும் அச்சுறுத்தல்கள் மத்தியிலும் பலவித சிரமங்களுக்கும் முகம் கொடுத்து சாட்சியங்களை வழங்கினர். விசாரணையாளர்கள் கூடச் சாட்சியாளர்களை மிரட்டியமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு எவ்வளவோ இடையூறுகள் மத்தியில் வழங்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அறிக்கை எவ்வித நடவடிக்கையும் இன்றிக் கிடப்பில் போடப்பட்டது. இது மஹிந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட உள்ளக விசாரணைகளும் அவற்றின் பலாபலன்களும். ரணில் - மைத்திரி ஆட்சியில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டது. காணாமற்போனோர் விவகாரம் தீர்க்கப்படுமெனவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் உள்ளகப் பொறிமுறை மூலம் சர்வதேச நிபுணர்கள் உதவியுடன் மேற்கொள்ளப்படுமென ஏற்றுக்கொள்ளப்பட்டது. கண்துடைப்பாக, இயங்காத ஒரு காணாமற் போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்படுமெனக் கூறப்பட்டது.

அதன் பின்பு ஒவ்வொரு அமர்வின் போதும் கால அவகாசம் கோரிப் பெறப்பட்டது. இவ்வாறு காலம் இழுத்தடிக்கப்பட்டு எதுவுமே நிறைவேற்றப்படாமல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்றுவரை இளமை குன்றாமல் உயிருடன் இருந்து அரச எதிர்ப்பாளர்களையும், விமர்சிப்பவர்களையும் வேட்டையாடி வருகிறது. அதாவது இந்த இரு தரப்பினரும் பேரவையின் தீர்மானங்களை எதிர்த்தபோதும், ஆதரித்த போதும் தொடர்ந்து சர்வதேசத்தையும் தமிழ் மக்களையும் ஏமாற்றி வந்தனர் என்பதே உண்மை.

ஆனால் 2020ல் கோத்தபாய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததும் இலங்கை அனுசரணை வழங்கிய 46/1 வரையான தீர்மானத்திலிருந்து விலகுவதாக அவரின் ஆட்சிப் பீடம் அறிவித்துவிட்டது. 46/1 தீர்மானம் இலங்கையின் அரசியலமைப்பை மீறியது என்பதையும் இலங்கையின் இறைமையை நிராகரிக்கிறது என்பதையும் கண்டு பிடிக்க அவர்களுக்குப் பல வருடங்கள் பிடித்தன என்பதுதான் அதிசயம். எனவே இம்முறை இடம்பெறும் அமர்வின் போது இலங்கையின் அரசியலமைப்பு, இறைமை, உள்ளப் பொறிமுறை என்பன பற்றி இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் உரத்து ஒலித்துக் கொண்டிருக்கிறார். இவர்கள் இலங்கையின் இறைமையின் பேரில் அதை ஒரு கவசமாகப் பயன்படுத்தி தமிழ், முஸ்லிம் மக்களின் இறைமையையும் சுயாதீனத்தையும் பறிக்கின்றனர். அது மட்டுமின்றி 63 இலட்சம் மக்கள் உணவுப் பாதுகாப்பின்றி அவஸ்தைப்படும் நிலையில், அத்தியாவசியத் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாத துன்பத்தில் தள்ளப்படும் அவலத்துக்குக் காரணமான மோசடி, இலஞ்சம், ஊழல்,



இன ஒடுக்குமுறை என்பவற்றையும் லாவகமாக தொடர்கின்றனர். சர்வதேச நாணய நிதியத்திடமும் வெளிநாடுகளிலும் கையேந்தி நிற்கும் நிலையிலும் சர்வதேசத்தால் போர்க்குற்றவாளிகளாகவும் மனித குல விரோதிகளாகவும் இனம் காணப்பட்டவர்களைக் பாதுகாப்பதிலேயே இன்றைய ரணில் ஆட்சியும் அக்கறை காட்டி வருகிறது. சர்வதேசத்தைத் தொடர்ந்தும் ஏமாற்றும் முயற்சிகளில் ஆட்சியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அவ்வகையிலேயே இலங்கைக் குழுவினர் பேரவையும் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளைத் தனித்தனியே சந்தித்து தங்களை நியாயப்படுத்தி வருகின்றனர்.

ஆனால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் அறிக்கை, இணை அனுசரணை நாடுகளால் முன்வைக்கப்பட்ட பிரேரணை, மனித உரிமை நிறுவனங்களின் அழுத்தம் என்பன இலங்கையில் ஏமாற்றுகளுக்கு இடமளிக்கா போன்றே தோன்றுகின்றது. இலங்கையின் உள்ளகப் பொறிமுறை என்பது அப்பட்டமான ஒரு ஏமாற்று என்பதைச் சர்வதேசம் உணர்ந்ததாலேயே 46/1 தீர்மானத்தை நிறைவேற்றியது.

அதேவேளையில் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான மாவிட்டபுரத்திலிருந்து அம்பாந்தோட்டை வரையான ஊர்திப் போராட்டம், காணாமற் போனோர் உறவினரின் போராட்டங்கள் என்பவை மனித உரிமைகள் பேரவையின் சில சாதகமான பலாபலன்களை ஏற்படுத்த முடியும். அவற்றை உறுப்பு நாடுகளிடம் கொண்டு செல்வதில் தமிழ்த் தலைமைகள் வகிக்கும் பங்கு எப்படியிருக்கும் என்பதுதான் இங்கு எழும் கேள்வி. கால அவகாசம் வழங்குவது என்ற பேரில் சில தமிழ்ப் பிரதிநிதிகள் அரசாங்கத்துக்குச் சார்பாகச் செயற்பட்டு, சர்வதேச உடன்படிக்கைகளை வலுவிழக்க வைக்க உதவியதை நாம் மறந்து விட முடியாது. எனவே சர்வதேச அளவில் தமிழ் மக்களுக்கு இன்று கிடைத்துள்ள சாதகமான சூழ்நிலையை தமிழ்த் தலைமைகள் சரியாகப் பயன்படுத்தத் தவறுவார்களாயிருந்தால் தமிழினத்திற்கு செய்யும் படுமோசமான துரோகம் அதைவிட வேறு எதுவுமிருக்க முடியாது.

–கழியோடி–

# மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம்



நிலாந்தன்

**"இடிக்கப்பட முடியாத, எரிக்கப்பட முடியாத, தடுக்கப்பட முடியாத நினைவு கூரும் வழிமுறைகளை தமிழ் மக்கள் கண்டுபிடிக்க வேண்டும்."**



2009க்கு பின்னர் வரும் 14-வது மாவீரர் நாள் இது.கடந்த 13 ஆண்டுகளாக தாயகத்தில் மறைவாகவும் வெளிப்படையாகவும் ஏதோ ஒரு விதத்தில் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

நினைவுகூர்தல் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை அழுவது துக்கிப்பது என்பவற்றிற்கும் அப்பால் ஆழமான பரிமாணங்களைக் கொண்டது. 2009க்கு பின்னரான தமிழ் மக்களின் அரசியல் எனப்படுவது இழப்புக்கு நீதி கோரும் அரசியல்தான். ஈழப்போரில் இதுவரை கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயம் வேண்டி முன்னெடுக்கப்படும் ஓர் அரசியல்தான். நீதிக்கான போராட்டத்தில் நினைவுநாட்கள் பின்வரும் முக்கியத்துவங்களை கொண்டிருக்கின்றன. முதலாவது முக்கியத்துவம்.அவை உளவியல் அர்த்தத்தில் அல்லது மருத்துவ அர்த்தத்தில் துக்கத்தைக் கொட்டித்தீர்க்கும் சந்தர்ப்பங்கள் ஆகும். குறிப்பாக வெளிப்படையாக நினைவுகூர முடியாத காலகட்டங்களில், அடக்கப்பட்ட துக்கத்தை வெளியே கொட்டும் சந்தர்ப்பங்களாக அந்நாட்கள் அமைகின்றன. இந்தவகையில் அது ஒரு உளவியல் ஆற்றுப்படுத்தல் நிகழ்வாகும். அடக்கப்பட்ட துக்கமானது ஒரு கட்டத்தில் உடல் நலத்தையும் மன நலத்தையும் பாதிக்கும். வெளிப்படுத்தப்படாத துக்கம் வேறு விதங்களில் ஆவேசமாக வெளிப்படும். எனவே துக்கத்தை வெளி வழிய விடுவது என்பது உளவியல் அர்த்தத்தில் ஒரு ஆற்றுப்படுத்தல் செய்முறைதான். ஒரு கவுன்சிலிங்தான்.

இரண்டாவது முக்கியத்துவம், ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுத்துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்ற வேண்டிய ஒரு காலகட்டத்தில் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். நினைவுநாட்கள் தமிழ் மக்களை ஒப்பீட்டளவில் திரளாகக் கூட்டிக் கட்டுகின்றன.தாயகத்திலும் புலம்பெயர்ந்த பரப்பிலும் அவை தமிழ் மக்களை ஒப்பீட்டளவில் ஒரு தேசமாகக் கூட்டிக் கட்டுகின்றன.

தேசியம் என்பது அதன் பிரயோக அர்த்தத்தில் திரளாக்கந்தான். நினைவு நாட்கள் தமிழ் மக்களை எல்லை கடந்து.பிரதேசம் கடந்து, மதம் கடந்து, வேறு ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து, ஒரு திரள் ஆக்குகின்றன. அவை தமிழ் மக்களை ஒரு கூட்டமாக திரட்டிக்கட்டும் உணர்ச்சிகரமான நிகழ்வுகள்.

தமிழ் மக்கள் தமது கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்றும் போது அது நீதிக்கான போராட்டத்தின் உந்துவிசையாக மாறும். எனவே அந்த அடிப்படையில் கூறின்,நினைவு கூர்தல் என்பது நீதிக்கான போராட்டத்திலிருந்து பிரிக்கப்படவியலாத ஒரு பகுதி.

மூன்றாவது முக்கியத்துவம்.தாயகத்தைப் பொறுத்தவரை.நினைவு கூர்தலில் ஓர் எதிர்ப்பு இருக்கிறது.அரசாங்கம் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தின் நினைவு கூர்தலை சட்டப்படி தடுக்கின்றது. அல்லது மறைமுகமாக மிரட்டித் தடுக்கிறது. அல்லது நினைவுச் சின்னங்களை இடித்து அழிக்கின்றது. இவ்வாறு நினைவுச் சின்னங்களை இடிக்கின்ற நினைவு கூர்தலைத் தடுக்கின்ற.ஒடுக்கும் அரசியலுக்கு எதிராக நினைவு கூர்தலுக்கான தமது உரிமையை -கூட்டுரிமையை பண்பாட்டு உரிமையை-தமிழ் மக்கள் நிலைநாட்டும் களங்களாக அவை காணப்படுகின்றன.

இலங்கைத்தீவின் இனப்பிரச்சினை வரலாறு என்பது ஒரு விதத்தில் நினைவுச் சின்னங்களை இடிக்கும் வரலாறும். அவ்வாறு இடிக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை திரும்ப கட்டும் வரலாறுந்தான். கடந்த 13 ஆண்டுகளாக பல மாவீரர் துயிலும் இல்லங்கள் இலங்கை அரச படைகளின் படைத்தளங்களாக காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒப்பீட்டளவில் பெரிய மாவீரர் துயிலும் இல்லம் கோப்பாயில் காணப்பட்டது. அது இப்பொழுது அப்பகுதிக்கான படைத் தலைமையகமாகக் காணப்படுகிறது.

மாவீரர் துயிலும் இல்லங்கள் மட்டுமல்ல, சிவகுமாரனின் சிலை, தமிழராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுச் சின்னம், திலீபனின் நினைவுச் சின்னம் போன்ற பல்வேறு நினைவுச் சின்னங்கள் காலத்துக்கு காலம் இடித்து அழிக்கப்பட்டிருக்கின்றன.ஆனால் அவர்கள் இடிக்க இடிக்க தமிழ் மக்கள் தொடர்ந்து புதிதாக கட்டிக் கொண்டேயிருக்கிறார்கள்.

எனது நண்பர் ஒருவர் கூறுவது போல, இடிக்கப்பட முடியாத, எரிக்கப்பட முடியாத,தடுக்க்கப்பட முடியாத நினைவு கூரும் வழிமுறைகளை தமிழ் மக்கள் கண்டுபிடிக்க வேண்டும்.உதாரணமாக முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை அழித்தாலும், அந்த மைதானத்தில் மக்கள் கூடுவதை தடுத்தாலும், அந்த தடைகளையும் மீறி தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சியை தங்கள் வீடுகளில் தயாரித்து அருந்த முடியும்.தமிழ் மக்கள் கஞ்சி குடிப்பதை யாரும் தடுக்க முடியாது.எல்லாக் குசினிகளிலும் கஞ்சி காய்ச்சப்படுவது என்பது முள்ளிவாய்க்காலில் ஒரு நிலத்துண்டில், ஒரு நினைவுச் சின்னத்தின் முன் கூடியிருந்து அழுவதை விடப் பரவலானது.தமிழ் சிவில் சமூக அமையம் கூறுவது போல உணவு ஆயத்தமாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு காலக்கட்டத்தை நினைவு கூர உணவையே பயன்படுத்துவது.

எனவே நினைவுகளை அழிக்கும் ஓர் அரசியலுக்கு எதிராக,தமிழ் மக்கள் நினைவுகளைப் பேணும் ஓர் அரசியலை தொடர்ச்சியாக விடாது முன்னெடுத்து வருகிறார்கள்.குறிப்பாக 2009க்கு பின்வந்த உடனடுத்த ஆண்டுகளில்புலம்பெயர்ந்ததமிழ்ச் சமூகம் நினைவு கூர்தலை பெருமெடுப்பில் முன்னெடுத்தது. இந்த விடயத்தில் குளறுபடிகளும் ஒற்றுமையின்மையும் உண்டு.தோல்வியை ஏற்றுக்கொள்ளாத ஒரு மனோநிலையும் உண்டு. புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல தாயகத்திலும் இப்பொழுது நினைவு நாட்களுக்கு உரிமை கோரி நினைவுச் சின்னங்களை தத்தெடுக்கும் ஓர் அரசியல் தலையெடுக்கப் பார்க்கிறது. அதைத் தனியாக ஆராய வேண்டும்.

ஆனால் இங்கு முக்கியமாகச் சுட்டிக் காட்டப்படுவது என்னவென்றால், நினைவைக் கண்டு அல்லது ஒரு கூட்டு நினைவைக் கண்டு அஞ்சும் ஓர் அரசியலுக்கு எதிராக நினைவையே ஒரு போராடும் கருவியாக தமிழ் மக்கள் திருப்பிப் பிடிக்கிறார்கள் என்பதுதான். நினைவு கூர்தலுக்குள்ள மிக ஆழமான பரிமாணம் இது. அந்த அடிப்படையில் அரசாங்கம் அனுமதிக்காத எல்லா நினைவு நாட்களும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை போராட்டக் களங்கள்தான்.

நாலாவது முக்கியத்துவம், நினைவு கூர்தல் எனப்படுவது நினைவுகளை அடுத்தடுத்த தலைமுறைக்கு கடத்துகின்றது. இதன் மூலம் நினைவின் தொடர்ச்சி மட்டும் பேணப்படவில்லை, ஒரு போராட்டத்தின் தொடர்ச்சி மட்டும் பேணப்படவில்லை, ஒரு மக்கள் கூட்டத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியும் பேணப்படுகிறது. அதாவது தலைமுறைகள் தோறும் நினைவுகளைக் கடத்தும் பொழுது தேசமும் தலைமுறைகள் தோறும் நிலை பேறு உடையதாக மாறுகிறது.

கனடாவில் வசிக்கும் கவிஞர் சேரன் கூறுவது போல முதலாவது தலைமுறை நிலத்தை இழந்தது. ஆனால் மொழியை நினைவுகளை வைத்திருக்கிறது. அந்தத் தலைமுறையிடம் காணப்படும் தாயகத்தை நோக்கிய பிரிவேக்கந்தான் போராட்டத்தின் உந்துசக்திகளில் ஒன்று.ஆனால் இரண்டாவது தலைமுறையைப் பொறுத்தவரை அதனிடம் நிலத்தைப் பற்றிய நினைவுகள் இல்லை. மொழி இரண்டாகிவிட்டது.பண்பாடும் இரண்டாகிவிட்டது. அப்படியென்றால் மூன்றாவது தலைமுறையின் நிலை? இவ்வாறு புலப்பெயர்ச்சியால் திரைந்து போகும் ஒரு தேசம் நினைவு கூர்தலின்போது ஓரளவுக்காவது தன் தொடர்ச்சியைப பேணக்கூடியதாக இருக்குமா?

ஐந்தாவது முக்கியத்துவம்.நினைவுகூர்தல் என்பது யாரை நினைவு கூர்கிறோமோ அந்த தியாகியின் அரசியலைத் தொடர்வது மட்டும் அல்ல, அதைவிட ஆழமான பொருளில் அந்த தியாகியின் குடும்பத்துக்கு ஏற்பட்ட இழப்பை அந்த தியாகியில் தங்கி இருந்தவர்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதும்தான். நாட்டில் எல்லாத் தியாகிகளின் குடும்பங்களும் மகிழ்ச்சியாக நிறைவாக வாழ்கின்றன என்று கூற முடியாது.

குடும்பத்தின் அச்சாணி போன்ற பிள்ளை தியாகியான காரணத்தால் குலைந்துபோன குடும்பங்கள் உண்டு. அவற்றிற்கெல்லாம் உதவி வேண்டும்.யாருடைய தியாகத்தை நினைத்து தமிழ் மக்கள் பொது வெளியில் விளக்குகளை ஏற்றுகிறார்களோ, அந்த தியாகிகளின் வீடுகளில் அடுப்பு எரிகிறதா என்றும் பார்க்க வேண்டும். யாருடைய தியாகத்தை நினைத்து தமிழ் மக்கள் பெருமைப்படுகிறார்களோ.அந்த தியாகியின் இளம் மனைவியும் பிள்ளைகளும் கடந்த 13 ஆண்டுகளில் என்னவானார்கள் என்று தேட வேண்டும். எத்தனையோ பெண்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை. பல இடங்களில் புதிய திருமணங்களும் கசந்து போய்விட்டன.

இது தொடர்பாக யாரிடமும் சரியான புள்ளி விவரங்கள் இல்லை. குடும்பத்தில் அச்சாணி போன்ற நபர் இறந்து போனதால் கைவிடப்பட்ட பெற்றோர் உண்டு 'சகோதரர்கள் உண்டு ' மனைவியர் உண்டு பிள்ளைகள் உண்டு. எனவே தியாகிகளைப் போற்றுவது என்பது தியாகிகளின் இழப்பினால் அவர்களுடைய குடும்பத்தில் விழுந்த வெற்றிடத்தை நிரப்புவதுந்தான்.பல தியாகிகள் வீட்டைவிட்டு நாட்டுக்காக போராட வந்த பொழுது அவர்களுடைய வீடுகள் எப்படி இருந்தனவோ அப்படித்தான் இப்பொழுதும் இருக்கின்றன. முன்னாள் இயக்கத்தவர்களுக்கும் தியாகிகளின் குடும்பங்களுக்கும் சமூகத்தில் கிடைக்கும் மரியாதையைப் பார்த்துத்தான் அடுத்த தலைமுறை அரசியல் செய்யத் துணியும். இது போன்ற பல விடயங்களை தமிழ் மக்கள் சிந்திப்பதற்கு வேண்டிய சூழலை நினைவு நாட்கள் உருவாக்குகின்றன.

எனவே மேற்சொன்ன காரணங்களை தொகுத்துப்பார்த்தால் நினைவு கூர்தலின் பல்பரிமாணம் தெரியவரும்.அது ஒரு கவுன்சிலிங்.அது ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி. அது ஒரு எதிர்ப்பு. அது ஒரு போராட்டம். அது ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுத் துக்கத்தை அரசியல் ஆக்க சக்தியாக மாற்றும் பண்புருமாற்றக் களம். மிலன் குந்தேரா கூறியதுபோல "அதிகாரத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் என்பது, மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டந்தான்"





# தேசமாகச் சிந்திக்கும் சிங்கள ஆட்சியாளர்கள் – ரணில் கையாளும் நகர்வு



-நிக்ஷன்-

**"சம்பந்தன் அல்லாத சூழலில் வடக்குக் கிழக்குத் தமிழ்க் கட்சிகளிடம் எதிர்க்கட்சிப் பதவி சென்றுவிட்டால், மீண்டுமொரு பிரிவினைவாதம் அல்லது இனப்பிரச்சினை சர்வதேசமயப்படுதல் போன்ற காரண காரியங்களுக்கு அது வசதியாக அமைந்துவிடும் என்ற ஒரு அச்சம் சிங்கள தலைவர்களிடம் உண்டு"**

இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்பட வேண்டுமென்ற ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் கொள்கையைத் தற்போது ரணில் விக்கிரமசிங்க கையாளுகிறார் என்பதை விட, சிங்கள ஆட்சியாளர்களின் கொள்கை தான் அது என்பதை ஜே.வி.பி நிரூபித்து வருகிறது. சென்ற புதன்கிழமை கொழும்பில் ஜே.வி.பி தமிழ் மக்களுடன் நடத்திய சந்திப்பில் அது வெளிப்பட்டுள்ளது. இது பௌத்த சிங்கள நாடு என்பது தான் ஜே.வி.பியின் கொள்கை. அதன் உறுப்பினர்களுடைய நாடாளுமன்ற உரைகளில் இருந்து இக் கொள்கை ஏற்கனவே வெளிப்பட்டுள்ள நிலையில், குறித்த சந்திப்பின் மூலம் மேலும் அது பட்டவர்த்தனமாகியுள்ளது.

2009 மே மாதம் போரை மகிந்த வெற்றிகொண்டது போன்று, 2023 மார்ச் மாதம் ரணில் அரசியல் ரீதியாகத் தமிழ்த்தரப்பை வெற்றி கொள்வார் என்பது கசிந்துள்ளது. சர்வதேசம் ரணிலைக் கையாளும் முறைகளும், ரணில் சர்வதேசத்தை அணுகும் விதமும் அதனை வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் கோட்டாபய ராஜபக்சவைத் துரத்திய சிங்களவர்களின் வாய்களும் மூடப்படும். பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் இந்தியா மூலம் ஈழத்தமிழர்கள் பெற்றுக்கொண்டது என்பதைத் தாம் ஏற்றுக்கொள்வதாகக் கூறிய ஜே.வி.பி தலைவர் அனுரகுமர திஸாநாயக்கா, தனிப்பட்ட முறையில் 13 ஐ தான் நிராகரிப்பதாகவும் கூறியிருக்கிறார்.

ஆனால் வடக்குக் கிழக்கு இணைந்த அரசியல் தீர்வுக்கோ அல்லது இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதிலோ அனுரகுமார திஸா நாயக்க தெளிவுடன் இல்லை என்று சந்திப்பில் பங்குபற்றிய தமிழ்ச் செய்தியாளர் ஒருவர் கூர்மைச் செய்தித் தளத்திற்குக் கூறினார். அத்துடன் தற்போது நடைமுறையில் உள்ள ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் அல்லது இலங்கையர்கள் என்ற அடையாளத்துடன் ஈழத்தமிழர்கள் வாழ வேண்டுமென்ற தொனியும் வலுவாகத் தென்பட்டது என்றும் அந்தச் செய்தியாளர் கூறியிருக்கிறார்.

2006 இல் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆதரவுடன் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்து வடக்குக் கிழக்கு மாகாணத்தை இரண்டாகப் பிரித்தவர்கள்தான் இந்த ஜே.வி.பி. ஆனால் தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் உருவாகியுள்ள ஸ்திரமற்ற அரசியல் நிலை என்பதைத் தமக்குச் சாதகமாக்கினாலும், தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்பது ஜே.வி.பிக்கு நன்கு தெரியும். ஆனால் தமது ஆசனங்களை அதிகரித்துப் பெரும்பான்மைச் சிங்களக் கட்சிகளில் ஏதேனும் ஒன்று ஆட்சி அமைக்கும்போது ஆதரவு கொடுத்து ஆட்சியில் பங்கெடுக்கவும் ஜே.வி.பி விரும்புகின்றது. அப்படி இல்லையேல் பலமான எதிர்க்கட்சியாக இருக்க வேண்டும் என்ற விருப்பமும் ஜே.வி.பியிடம் உண்டு. அதற்கேற்பவே ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நகர்வுகளும் அமைந்திருக்கின்றன.

குறிப்பாக சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியைப் பலவீனமாக்கிப் பலமான எதிர்க்கட்சி இல்லாத அரசியல் சூழல் ஒன்றை உருவாக்க ரணில் முற்படுகின்றார். ஜே.வி.பியை ஒருபோதும் தனது அணிக்குள் அல்லது தனது அரசாங்கத்துடன் குறைந்த பட்சம் ஒத்துழைத்துச் செயற்பட ஜே.வி.பி விரும்பாது என்பது ரணிலுக்குத் தெரியாததல்ல.

ஆகவே சஜித் அணியைத் தனிமைப்படுத்திப் பலவீனமாக்கி அல்லது சஜித் அணியைத் தனது அரசியல் நகர்வுக்குள், அதாவது அன்னம் சின்னத்துக்குள் உள்வாங்கிச் செயற்பட ரணில் மேற்கொள்ளும் காய் நகர்த்தல்கள் சில சமயங்களில் வெற்றியளித்தால், அனுரகுமார திஸாநாயக்கா விரும்புவது போன்று பிரதான எதிர்க்கட்சியாக வரக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

டளஸ் அழகபெரும தலைமையில் இயங்கும் முன்னாள் பெதுஜனப் பெரமுனக் கட்சி உறுப்பினர்களின் அணி ஆட்சியமைக்கும் அளவுக்கு எந்த ஒரு தேர்தல்களிலும் பெருமளவு ஆசனங்களைப் பெறக்கூடிய நிலைமை இல்லை. ஜே.வி.பி இணைந்து போட்டியிட்டால் கூட அது சாத்தியமாகக் கூடிய தன்மைகள் மிகக் குறைவு. சஜித் - டளஸ் கூட்டிணைந்து தேர்தலில் போட்டியிட்டால் கூட வெற்றி சாத்தியமா என்பதும் கேள்விக்குரியதுதான். சம்பந்தன் அல்லாத சூழலில் வடக்குக் கிழக்குத் தமிழ்க் கட்சிகளிடம் எதிர்க்கட்சிப் பதவி சென்று விட்டால், மீண்டுமொரு பிரிவினைவாதம் அல்லது இனப்பிரச்சினை சர்வதேசமயப்படுதல் போன்ற காரண காரியங்களுக்கு அது வசதியாக அமைந்துவிடும் என்ற ஒரு அச்சம் சிங்கள தலைவர்களிடம் உண்டு. ஆகவே தற்போது ரணில் மேற்கொண்டு வரும் நகர்வின் பிரகாரம், ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய தேசிய முன்னணியை மீளச்செயற்படுத்தி, அதன் அன்னம் சின்னத்தில் ஜே.வி.பி தவிர்ந்த அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கித் தேர்தலில் போட்டியிட எடுக்கும் முயற்சிதான் முன்னிலை வகிக்கிறது என்பது தற்போது கண்கூடு. அன்னம் சின்னத்தில் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன உள்ளிட்ட ஏனைய சிறிய சிங்களக் கட்சிகள் குறிப்பாக பிரதமர் தினேஸ் குணவர்த்தனவின் இடதுசாரிக் கட்சி, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்றவற்றை இணைக்கும் முயற்சிகள் தீவிரமாக இடம்பெறுகின்றன. அத்துடன் சரத் பொன்சேகா, பாட்டாளி சம்பிக்க ரணவக்க ஆகியோரைக் கூட இணைக்கும் முயற்சியும் உண்டு. அப்படி இவர்கள் இணையாவிட்டால் ரணிலுக்கு அது பெரிய பிரச்சினையாக இருக்கவும் வாய்ப்பில்லை.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ரணிலுடன் மிக நெருக்கமாக செயற்பட்டவர். 2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கத்தை அமைக்கச் சந்திரிகா முன்நின்று செயற்பட்டுமிருந்தார். ஆனால் பொருளாதார நெருக்கடியின் பின்னரான அரசியல் சூழலில் ராஜபக்ச குடும்பத்தின் செல்வாக்கின் பிரகாரம் ஜனாதிபதியாகப் பதவியேற்றதால், ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவின் ஆதரவைத் தவிர்த்துவிட்டுச் செயற்பட முடியாத சிக்கல் உண்டு. இதனால் சந்திரிகா ரணிலோடு இணைந்து செயற்படக்கூடிய வாய்ப்புகள் அரிதாகிவிட்டன. அத்துடன் மைத்திரிபால சிறிசேனவுடன் முரண்பட்டுள்ளதால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளக் கைப்பற்றவும் முடியாது. அதனால் சந்திரிகா தற்போதைய அரசியல் சூழலில் தீவிர முயற்சி எடுத்தாலும் ரணில் - மகிந்த கூட்டை உடைக்கவே முடியாது.

ரணிலின் மேற்படி நகர்வுக்கு மாற்றீடான காய் நகர்த்தல்களையும் சந்திரிகா முன்னெடுக்க முடியாத அரசியல் பின்னணிகளே அதிகம். அத்துடன் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியை சந்திரிகாவினால் பலப்படுத்தவும் முடியாது. அப்படியென்றால், டளஸ் தலைமையிலான அணியும் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சியில் உள்ள உறுப்பினர்கள் பலரும் சஜித் அணியோடு கூட்டுச் சேர வேண்டும். ஆனால் அது இலகுவான காரியம் அல்ல. இந்த அணியோடு ஜே.வி.பியும் கூட்டுச் சேரக்கூடிய வாய்ப்புகள் இல்லை. ஆகவே இன்று வரைக்கும் ரணில் மேற்கொள்ளும் காய் நகர்த்தல்கள் முன்னேறிச் செல்வதையே அவதானிக்க முடியும். சென்ற செவ்யாக்கிழமை கொழும்பில் ரணில், மகிந்த மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோர் சந்தித்துப் பேசியுள்ளனர். தொடர்ந்து இரண்டு நாட்கள் சந்திப்புகள் இடம்பெற்றிருக்கிறன. அன்னம் சின்னத்தில் ஐக்கிய தேசிய முன்னணியாகச் செயற்படுவது குறித்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் காய் நகர்த்தல்களை மகிந்த ராஜபக்ச இச் சந்திப்பில் ஏற்றிருக்கிறார். அத்துடன் ஏனைய சிறிய சிங்களக் கட்சிகள் மற்றும் மலையகத் தமிழ் - முஸ்லிம் கட்சிகள், வடக்குக் கிழக்கில் இருந்து சிங்களக் கட்சிகளுடன் இணைந்து செயற்படும் முன்னாள் ஆயுதக் குழுக்கள் போன்றவற்றையும் இணைக்கும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பின் ஆசனம் குறைவடையும் என்ற சமிக்ஞை தற்போதிருந்தே வெளிப்படுகின்றன. இரு ஆசனங்களில் இருந்து ஒரு ஆசனமாகக் குறையக் கூடிய ஆபத்துக்களே முன்னணிக்கு உண்டு. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பின் ஆசனம் குறைவடையும் என்ற சமிக்ஞை தற்போதிருந்தே வெளிப்படுகின்றன. இரு ஆசனங்களில் இருந்து ஒரு ஆசனமாகக் குறையக் கூடிய ஆபத்துக்களே முன்னணிக்கு உண்டு. அத்துடன் கொழும்பை மையமாகக் கொண்ட சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளின் தமிழ் முகவர்கள் இம்முறை கூடுதல் ஆசனங்களை அல்லது கூட்டமைப்பு - முன்னணி ஆகியவற்றின் வாக்குகளைச் சிதறடிக்கும் அளவுக்குப் பலம் பெற்று வருகின்றனர் என்பதும் தெரிகிறது.

ஆகவே இப் பின்னணியில் மேற்படி ரணில் விக்கிரமசிங்கவின் அன்னம் சின்னத்தில் அனைத்துச் சிங்களக் கட்சிகளும் போட்டியிடுவது என்ற உத்தி வெற்றியளிக்குமானால், ஜே.வி.பி பிரதான எதிர்க்கட்சி என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அத்துடன் ஜே.வி.பி பிரதான எதிர்க்கட்சியாக இருக்க வேண்டுமென ரணில் - சஜித் உள்ளிட்ட அனைத்துச் சிங்கள அரசியல் தலைவர்களும் பௌத்த குருமாரும் விரும்புவர்.

ஏனெனில் சம்பந்தன் அல்லாத சூழலில் வடக்குக் கிழக்குத் தமிழ்க் கட்சிகளிடம் எதிர்க்கட்சிப் பதவி சென்று விட்டால், மீண்டுமொரு பிரிவினைவாதம் அல்லது இனப்பிரச்சினை சர்வதேசமயப்படுதல் போன்ற காரண காரியங்களுக்கு அது வசதியாக அமைந்துவிடும் என்ற ஒரு மிகைப்படுத்தப்பட்ட அச்சம் சிங்கள தலைவர்களிடம் உண்டு. ஆகவே இப் பின்புலத்தில் பிரதான எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பு ஜே.வி.பியிடம் செல்லக்கூடிய வாய்ப்புகள் அதிகம் எனலாம். இந்த நகர்வுகளை அவதானித்தே, ஜே.வி.பி தமிழ் மக்களை அணைத்துச் செல்வது போன்ற ஒரு அணுகுமுறையைக் கையாள முற்படுகின்றது. சென்ற புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் தமிழர்கள் அழைக்கப்பட்டு விளக்கம் கொடுக்கப்பட்ட பின்னணியும், ஆனால் இலங்கை ஒற்றையாட்சி என்ற கட்டமைப்பை விட்டுவிட முடியாத தமது அரசியல் நிலைப்பாட்டையும் ஜே.வி.பி தம்மைச் சந்தித்த தமிழர்களிடம் தெளிவுபடுத்தியிருக்கிறது.

11ஆம் பக்கம் பார்க்க...



# பிராந்திய செய்திகள்



## பல்கலைக்கழகத்திற்கு 44,000 மாணவர்களை உள்வாங்க நடவடிக்கை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2021 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்குவதற்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய இம்முறை 44,000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளதாக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் அன்று (02) வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் இது தொடர்பில் மேலும் தெளிவுபடுத்துகையில்,

2021 ஆம் ஆண்டு 2 இலட்சத்து 83,616 பேர் உயர்தர பரீட்சைக்கு தோற்றினர். அவர்களில் ஒரு இலட்சத்து 71,497 பேர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 91,115 பேர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்துள்ளனர். விண்ணப்பித்தவர்களில் 43,927 பேர் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

இவர்களில் உயிரியல் விஞ்ஞான பீடத்திற்கு 9,749 மாணவர்களும் , பௌதீக விஞ்ஞான பீடத்திற்கு 8,020 மாணவர்களும் , வணிக பீடத்திற்கு 7,701 மாணவர்களும் , கலை பீடத்திற்கு 11,314 மாணவர்களும் , பொறியியல் தொழிநுட்ப பீடத்திற்கு 2,236 மாணவர்களும், உயிர் அமைப்புக்கள் தொழிநுட்ப பீடத்திற்கு 1,543 மாணவர்களும் , ஏனைய பீடங்களுக்கு 665 மாணவர்களும் உள்வாங்கப்படவுள்ளனர்.

மேலும் இம்முறை நான்கு புதிய பீடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் தளா 50 மாணவர்கள் என 200 மாணவர்களை உள்வாங்க எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நிதி பொருளாதார பீடம் மற்றும் புத்தாக்க இசை தொழிநுட்பம் மற்றும் தயாரிப்பு ஆகியவை புதிய பீடங்களாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதே போன்று ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழி மற்றும் பயன்பாட்டு மொழியில் பீடமும் , வவுனியா பல்கலைக்கழகத்தில் வங்கி மற்றும் காப்புறுதி பீடமும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதே வேளை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கனணி அறிவியல் , மென்பொருள் பொறியியல் மற்றும் தகவல் அமைப்புக்கள் ஆகிய பீடங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவை ஏனைய சில பல்கலைக்கழகங்களில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்றார்.

පල්කලෙයිල් ...
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - இலங்கை
UNIVERSITY GRANTS COMMISSION - SRI LANKA

## யாழில் டிக் டொக் எடுக்க முயன்று கடலிற்குள் விழுந்த இளைஞன்


யாழ்ப்பாணம், பருத்தித்துறையில் துறைமுகத்தில் நண்பருடன் மோட்டார் சைக்கிளில் டிக் டொக் காணொளி எடுக்க முனைந்த இளைஞரொருவர் கடலில் வீழ்ந்த சம்பவமொன்று பதிவாகியுள்ளது. அன்று (01) மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம், பருத்தித்துறையை சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கடலில் வீழ்ந்துள்ளார்.

இரண்டு நண்பர்கள் இணைந்து மோட்டார் சைக்கிளில் டிக் டொக் எடுக்க முனைந்த போது மோட்டார் சைக்கிளுடன் ஒருவர் கடலுக்குள் வீழ்ந்துள்ளார். அதனையடுத்து அவ்விடத்தில் கூடிய இளைஞர்களும், பாதுகாப்பு தரப்பினரும் கடலில் வீழ்ந்த இளைஞரை மீட்டெடுத்ததுடன் மோட்டார் சைக்கிளையும் மீட்டு கரைசேர்த்தனர்.



## மின் கட்டண அதிகரிப்பு குறித்து வெளியான தகவல்!

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்காமல் மின் கட்டணத்தை அதிகரிக்க கூடிய வாய்ப்பு ஒன்று உள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது. மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில், பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவை நாட வேண்டிய அவசியமில்லை என மின்சார சபை தெரிவித்துள்ளது. அதிகரிக்கப்படவுள்ள மின்சாரக் கட்டணங்களின் கணக்கீடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.




எவ்வாறாயினும், அன்று (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, அமைச்சரவையின் தீர்மானங்கள் மின்சார சட்டத்திற்கு அமைவாக அமையுமாயின் ஆணைக்குழுவிற்கு அதில் எவ்வித பிரச்சினையும் இல்லை என தெரிவித்தார். அடுத்த ஆண்டு ஜனவரி மற்றும் ஜுன் மாதங்களில் இரண்டு கட்டங்களாக மின் கட்டணத்தை உயர்த்த அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில் 21 வயது இளைஞன் சடலமாக மீட்பு

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் கந்தன் குளத்தில் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று அன்று (12) மீட்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மல்லாவி ஐயங்கன் குளத்தைச் சேர்ந்த பகிரதன் சுமன் என்ற 21 வயதுடைய இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



இதனையடுத்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவானின் அனுமதியுடன் சடலம் மீட்கப்பட்டு, உடல் கூறு பரிசோதனைகளின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிசார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரனைகளை கிளிநொச்சி பொலிசார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களுக்கு காத்திருந்த அதிர்ச்சி!

கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீனி புர பகுதியில் ஆயுதங்களுக்கு பயன்படுத்தும் தோட்டாக்கள் அன்று (03) மாலை மீட்கப்பட்டுள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர். சீனிபுர பகுதியில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் சந்தேகத்துக்குரிய பைப் (குழாய்) ஒன்றில் தோட்டாக்கள் இருந்துள்ளது. அதனை சிறுவர்கள் பெற்றோருக்கு தெரியப்படுத்திய பின் அக்போபுர பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்.

T56 தோட்டாக்கள் 152,
துப்பாக்கி 04 தோட்டாக்கள்,
84ள 04 தோட்டாக்கள்,
9 MM துப்பாக்கியின் தோட்டாக்கள் 20,
சைலன்சர் 01,
SLR (எஸ்எல்ஆர்) துப்பாக்கி தோட்டாக்கள் 03,

அக்போபுர குற்றத்தடுப்பு பொலிஸார் அனைத்தையும் மீட்டு இது குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## திரிபோஷா உற்பத்தி மீண்டும் ஆரம்பம்

திரிபோஷ உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை திரிபோஷ நிறுவனம் தெரிவித்துள்ளது.

தகுந்த சோளம் கிடைத்தமையினால் திரிபோஷா உற்பத்தியை மீண்டும் ஆரம்பித்துள்ளதாக நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்துள்ளார்.




இந் நிறுவனத்தால் நாளாந்தம் 60,000 திரிபோஷா பக்கற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு நாடு முழுவதும் விநியோகிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே தாய்மார்களுக்கான திரிபோஷா பொருட்கள் உற்பத்தி தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# சினிமா துளிகள்



## வலிமை, பீஸ்ட் வசூலை விட அதிகம் வசூல் செய்த லவ் டுடே..




கடந்த நவம்பர் 4ஆம் திகதி வெளிவந்த மாபெரும் வசூல் சாதனையை படைத்து வரும் திரைப்படம் லவ் டுடே.

பிரதீப் ரங்கநாதன் இப்படத்தை இயக்கி, அவரே ஹீரோவாகவும் நடித்திருந்தார். மேலும் இவானா, யோகி பாபு, சத்யராஜ், ராதிகா சரத்குமார் உள்ளிட்டோர் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர்.

தமிழில் ரூ. 80 கோடியை கடந்து வசூல் செய்துகொண்டிருக்கும் லவ் டுடே திரைப்படம் கடந்த வாரம் தெலுங்கில் டப் செய்யப்பட்டு வெளிவந்தது.

பாக்ஸ் ஆபிஸ்

தமிழில் கிடைத்த ஆதரவிற்கு இணையாக தெலுங்கிலும் லவ் டுடே படத்திற்கு சிறந்த வரவேற்பு கிடைத்துள்ளது.

இந்நிலையில், தெலுங்கில் விஜய்யின் பீஸ்ட் மற்றும் அஜித்தின் வலிமை இரு திரைப்படங்களும் செய்த வசூலை விட ரூ. 12 கோடி வசூல் செய்து மாபெரும் சாதனையை படைத்துள்ளது லவ் டுடே.

## தனுஷுடன் நடிக்க சம்பளமே வாங்க மாட்டேன்..

தமிழ் சினிமாவில் முன்னணி ஹீரோவாக இருப்பவர் தனுஷ். இவர் நடிப்பில் அடுத்ததாக வாத்தி திரைக்கு வரவிருக்கிறது.

வாத்தி படத்தை தொடர்ந்து கேப்டன் மில்லர் படத்தில் நடித்து வருகிறார் தனுஷ். அருண் மாதேஸ்வரன் இயக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதையடுத்து சேகர் கமுலா இயக்கத்தில் தெலுங்கு திரைப்படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தின் பூஜை போடப்பட்டது.

ஈஸ்வரன், கலகத் தலைவன் ஆகிய படங்களில் கதாநாயகியாக நடித்திருத்தவர் நடிகை நிதி அகர்வால்.

இவர் அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில் தனுஷுடன் நடிக்க வாய்ப்பு கிடைத்தால் சம்பளமே வாங்க மாட்டேன் என்று கூறியுள்ளார்.



## கார்த்தி படத்தை வேண்டாம் என்று கூறிய நடிகை நயன்தாரா..



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக ரசிகர்களால் லேடி சூப்பர்ஸ்டாராக கொண்டாடப்பட்டு வருபவர் நடிகை நயன்தாரா. இவர் நடிப்பில் அடுத்ததாக கோல்ட் திரைப்படம் வெளியாகவுள்ளது.

இதை தொடர்ந்து கனெக்ட், நயன்தாரா 75, இறைவன், ஜவான் ஆகிய படங்களை கைவசம் வைத்துள்ளார். நடிகை நயன்தாரா தனது திரை வாழ்க்கையில் சில முக்கிய சூப்பர்ஹிட் திரைப்படங்களை தவறவிட்டுள்ளார்.

அப்படி அவர் தவறவிட்ட படங்களில் ஒன்று தான் கார்த்தி நடிப்பில் வெளிவந்த பையா. லிங்குசாமி இயக்கிய இப்படத்தில் தமன்னா கதாநாயகியாக நடித்திருந்தார். இப்படம் மாபெரும் அளவில் வெற்றிபெற்றது.

இந்நிலையில், தமன்னா நடித்திருந்த கதாநாயகியாக கதாபாத்திரத்தில் முதன் முதலில் நடிப்பதாக இருந்தது நயன்தாரா தானாம்.

ஆனால், சம்பள விவகாரம் காரணமாக நயன்தாராவிற்கு இப்படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைக்காமல் போவதாக அப்படத்தின் இயக்குனர் லிங்குசாமி அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

## முதலமைச்சர் வாழ்க்கை படத்தில் விஜய் சேதுபதி? எதிர்பார்ப்பில் ரசிகர்கள்


அரசியல் தலைவர்கள் வாழ்க்கை சினிமா படங்களாக வெளியாகி நல்ல வரவேற்பை பெறுகிறது. பிரதமர் நரேந்திர மோடி, முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங், மறைந்த முதல்-அமைச்சர் ஜெயலலிதா, ஆந்திர முதல்-மந்திரிகள் என்.டி.ராமராவ், ராஜசேகர ரெட்டி ஆகியோரின் வாழ்க்கை ஏற்கனவே படங்களாக வெளிவந்துள்ளன.

இந்த வரிசையில் கர்நாடக முன்னாள் முதல்-மந்திரி சித்தராமையா வாழ்க்கை கதையும் சினிமா படமாக தயாராக உள்ளது. இதுகுறித்து அவர் கூறும்போது, "எனது வாழ்க்கையை படமாக்க கட்சியினருக்கு விருப்பம் உள்ளது. ஆனால் அதில் நான் நடிக்கவில்லை" என்றார்.

இந்நிலையில் சித்தராமையா வாழ்க்கை படத்தில் அவரது வேடத்தில் விஜய் சேதுபதியை நடிக்க வைக்க முயற்சி நடப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. விரைவில் இதுகுறித்த அறிவிப்பு வரும் என்று சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சித்தராமையா வாழ்க்கை படத்தை வருகிற சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு திரைக்கு கொண்டு வந்தால் வெற்றிபெற வாய்ப்பாக அமையும் என்று கட்சியினர் முனைப்பு காட்டி வருகிறார்கள்.

சித்தராமையா அரசியலில் சில கட்சிகளில் இணைந்து படிப்படியாக உயர்ந்து இறுதியில் காங்கிரஸ் சார்பில் முதல்-மந்திரியாக ஆட்சி நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## சிவகார்த்திகேயன் பட இயக்குனருடன் இணைந்த ஜெய்?



பகவதி, சென்னை 28, சுப்ரமணியபுரம், வாமணன், கோவா உள்ளிட்ட பல படங்களில் நடித்து பிரபலமடைந்தவர் ஜெய். இவர் நடித்து எங்கேயும் எப்போதும், ராஜா ராணி உள்ளிட்ட படங்கள் இவருக்கு ரசிகர்கள் பட்டாளத்தை அதிகரித்தது.

இவர் கடைசியாக சுந்தர்.சி இயக்கத்தில் காபி வித் காதல் படத்தில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்திருந்தார். அருண்ராஜா காமராஜ் - சிவகார்த்திகேயன் இந்நிலையில் ஜெய் புதிய வெப் சீரிஸ் ஒன்றில் நடித்து வருவதாக கூறப்படுகிறது.

இதனை சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான கனா படத்தையும், உதயநிதி நடிப்பில் வெளியான நெஞ்சுக்கு நீதி படத்தையும் இயக்கிய அருண்ராஜா காமராஜ் இயக்கி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. விரைவில் இதுகுறித்த அறிவிப்பு வெளியாகும் என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# “இலங்கையில் தமிழர்களின் பூர்வீகம் என்பது பெருங்கற்கால பண்பாட்டுடன் தொடர்புடையது”(நேர்காணல்)–பேராசிரியர் சி.பத்மநாதன்

**கடந்தவார தொடர்ச்சி...**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையினர் கந்தரோடையிலும்.வன்னி மாவட்டங்களிலுள்ள நாகபடுவான். கட்டுக்கரைக் குளப்பகுதியிலும் அகழாய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். பின்னைய இரண்டிலும் காணப்பட்ட பொருட்கள் மிக முக்கியமானவை.

நான் முன்பு சொன்ன கருத்துக்களுக்கு அழுத்தம் அளிக்கின்ற வகையில் அவர்களுடைய கண்டுபிடிப்புக்கள் அமைந்தன. பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்கள் அந்த அகழ்வுகளில் கிடைத்துள்ளன. கரும் செம் மட்பாண்டத் துண்டங்கள். சில வழிபாட்டு சின்னங்கள். கரும் செம் மட்பாண்டத் துண்டங்களோடு குளக்கட்டிலுள்ள சிவப்பு மட்பாண்டங்கள். றுலல் (rulel pottery) மட்பாண்டங்கள். ரோமர் காலத்து நாணயங்கள். நாகர் வழங்கிய காசுகள் போன்றவை அங்கு கிடைத்துள்ளன. இவற்றை பற்றிய அறிக்கைகள் வெளிவரவில்லை. பத்திரிகைகளில் வெளியிட்ட சில கட்டுரைகளைக் கொண்டே இவற்றை நாம் அறிய முடிந்தது.

இருந்தும் வன்னியில் நடைபெற்ற அகழ்வுகளை இவர்களால் தொடர முடியவில்லை. மேலிடத்திலிருந்து அனுசரணை கிடைக்கவில்லை. இவற்றை பற்றிய அறிக்கைகளும் வெளிவரவில்லை.

கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை அங்கு அகழாய்வுகளை மேற்கொள்ளக்கூடிய தகமையை எவரும் இன்னும் பெறவில்லை. தொல்பொருள் சின்னங்களை தேடுவதற்கு கூட அவர்கள் முயற்சி மேற்கொள்ளவில்லை. அந்த நிலையில் அந்த நிறுவனத்தைப் பற்றி பேசுவது இப்பொழுது பொருத்தமாகாது. முறையான அகழ்வுகளை செய்து வெளிப்படையாக விபரங்களை பெற வேண்டுமானால்.இலங்கை அரசியலமைப்பில் மாற்றம் ஏற்பட வேண்டும். அதிகமான அதிகாரப் பரவல் இந்திய மாநிலங்களுக்குரிய வகையில் ஏற்பட்டால் தான் இவற்றை உரிய முறையில் கொண்டு செல்ல முடியும். இப்பொழுது மாகாண சபையின் அதிகாரங்களில் பொதுப் பட்டியலில் தொல்லியலும் அருங்காட்சியகங்களும் இடம் பெறகின்ற பொழுதிலும் மாகாண சபைகளினாலே இவை தொடர்பாக எதையும் மேற்கொள்ளவில்லை. நிறைவேற்று அதிகாரம் ஆளுநரின் வசம் இருப்பதே இதற்கான காரணம்.

தமிழ்நாட்டில் கீழடி பற்றிய அகழாய்வுகள் சர்வதேச பரிணாமத்தைப் பெற்றுள்ளன. அங்கு மத்திய அரசின் தொல்லியல் திணைக்களம் நாட்டின் பல பாகங்களில் அகழ்வுகளை வெளிப்படைத் தன்மைகளோடு செய்கின்றது. அதுமட்டுமன்றி தமிழ்நாட்டு தொல்லியல் துறை தான் கீழடியில் பெரும்பாலான அகழ்வுகளை செய்கிறார்கள். அப்படியான ஒரு நிலை இந்த நாட்டில் இல்லை. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் எங்கே அகழ்வு செய்வது அதனால் என்ன பலன் என்று சிந்திப்பதில் எந்த ஒரு பலனும் இருக்காது.

**கேள்வி –உரிய விழிப்புணர்வு இன்மை,சுயநலம் போன்றவற்றாலும் எமது வரலாற்று முதுசங்கள் அழிந்து போகின்றன என கவலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. பல்வேறு இடங்களிலும்,நேரடிக் கள ஆய்வில் ஈடுபட்ட ஒரு தொல்லியலாளர் என்ற வகையில் இதற்கான எடுத்துக் காட்டுக்கள் சிலவற்றை கூறமுடியுமா?**

நான் ஒரு பயிற்சி பெற்ற தொல்லியலாளர் அல்ல. வரலாற்றாசிரியர் என்ற முறையில் தொல்லியலில் ஈடுபாடு உண்டு. அத்தோடு தமிழ்ப் பிராமி எழுத்துக்களை வாசிக்கும் திறன் பெற்றிருப்பதனாலும் இவற்றைப் பற்றி பேச முடியும்.

விழிப்புணர்வு என்பது தமிழ் பேசும் மக்களிடையே அடிமட்டத்தில் தான் இருந்து வருகின்றது. எங்களின் ஆலயங்களில் அந்தணர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அட்சகர்களாக கடமை செய்து முடிந்ததும் போய் விடுவார்கள். ஆனால் ஒரு சிலரைத் தவிர மாவிட்டபுரம்.கீரிமலை. அகஸ்தியர் ஸ்தாபனம் ஆகியவற்றில் உள்ளவர்களைத் தவிர மற்றைய ஆலயங்களுக்கு பொறுப்பானவர்களும் அங்கே வழிபாடு நிகழ்த்தும் பூசகர்களும் எதுவிதமான அக்கறையும் கொள்வதில்லை. தொல்பொருள் சின்னங்களை பார்க்கப் போனால் அதைக் காட்டுவதற்கு தயக்கம் உள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். கிழக்கிலங்கையில் இவ்வாறானவர்கள் கூடுதலாக இருக்கிறார்கள். உதாரணமாக பிரபலமான ஆலயமான தான்தோன்றீஸ்வரத்தைக் கூறலாம்.

ஒப்பீட்டளவில் பௌத்த சமயம் தொடர்பான சின்னங்களை பொறுத்தவரையில் பௌத்த சங்கத்தார் மிகுந்த ஈடுபாடு உடையவர்களாய் இருக்கிறார்கள்.மலை நாட்டுப் பகுதிகளுக்குப் போனால் அங்கு அவர்கள் விகாரையிலே பல ஏடுகளை. பட்டயங்களை தொல்பொருள் சின்னங்களை வைத்திருப்பதைக் காணலாம். அது மட்டுமன்றி தென்னிலங்கையிலே அங்குள்ள ஊடகங்கள் சிலவற்றிலும் காலாகாலமாக தொல்பொருள் சின்னங்கள்.பண்பாட்டுச் சின்னங்கள் பற்றி விபரமாக எழுதுகிறார்கள். அந்த முறை தமிழ் ஊடகங்களில் காணப்படவில்லை.

அவற்றிலே ஆசிரியர்களாக கடமை புரிபவர்களும்.அதிகமாக எங்கள் பல்கலைக்கழகங்களில் பயிற்சி பெற்றவர்கள் தான். அவர்களின் கவனம் வேறு விடயங்களில் தான் செல்கிறது. அன்றாட அரசியலுக்கு முக்கியம் அளிக்கப்படுகின்றது.

தலைநகரில் உள்ள விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. ஆனால் அந்த செய்தித் தாள்களை படிக்கின்றவர்கள் எங்கு வாழ்கிறார்கள். அவர்களின் பிரச்சினைகள் என்ன என்று அக்கறை செலுத்துவதில்லை. பிராந்தியப் பத்திரிகைகளின் விரித்தாந்தங்கள் மிக மோசமானது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காணப்படும் பத்திரிகைகள் எதுவும் அண்மையில் தொல்பொருள் சின்னங்களைப் பற்றி எதுவும் சொல்வதில்லை. விழிப்புணர்வு என்பது ஒரு ஒப்பீட்டளவிலான விடயம். இப்பொழுது பெருமளவிலான விழிப்புணர்வு 2 மாகாணங்களில் ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் எங்களின் நூலைப் பற்றி அறிந்தவர்களிடையே இவ்வளவு பொருட்கள் இங்கு இருக்கின்றனவா? இவ்வளவு பெரிய நாகரீகம் எங்களுக்கு மூலமானதா என்ற சிந்தனை வெளிநாடுகளில் வாழுகின்ற படித்தவர்கள் மத்தியில் தோன்றி விட்டது.

அதேபோல் வடமாகாணத்தில் 4 மாதங்களுக்கு முன்பு ஆறு திருமுருகன் ஒரு பாரிய கட்டடத்தை நாவற்குழியில் ஒரு அருங்காட்சியகத்திற்கான நிலையமாக அமைத்துள்ளார். அதற்கு இங்குள்ள செல்வந்தர்களும். வெளி நாட்டிலுள்ளவர்களும் பெருந்தொகையான பணம் கொடுத்து அதை அமைப்பதற்கான செலவுகளைக் கொடுத்துள்ளார்கள். கட்டிடம் மிகவும் பிரமாண்டமானது. பரந்தளவில் அந்தப் பொருட்களை வைக்க முடியும். எந்தளவிற்கு தேடியிருக்கிறார்கள் என்பதை நான் இப்பொழுது சொல்ல முடியாது.

முக்கிய விடயம் என்னவென்றால்.முதல்நாள் திறப்புவிழா தொடர்பான கூட்டத்திலே 5000இற்கும் குறைவில்லாத மக்கள் கலந்து கொண்டனர். அதிகமாக குடா நாட்டிலும். தீவகத்திலும் வழிபாடு நடத்துகின்ற அந்தணர்கள். கல்லூரி.கச்சேரி.கல்வித் திணைக்களத்தில் உயர் பதவிகளைப் பெற்றிருக்கிற அதிகாரிகள். முதலான எல்லோரும் ஆண்களும் பெண்களுமாக வந்து கூடியிருந்தார்கள். தமிழாராய்ச்சி மாநாடு 1974இல்நடைபெற்ற போது தான் மிகக் கூடிய சனம் கலந்து கொண்டது.



பேராசிரியர். எஸ்.பத்மநாதன்

**சிவபூமி அருங்காட்சியகம்**

அதற்குப் பிறகு இந்த திறப்பு விழாவிலே தான் காண முடிந்தது ஏனென்றால்.அங்கு அதிகார வர்க்கத்தினுடைய கட்டுமானங்கள். அதிகாரங்கள். செல்வாக்குகள் இல்லை. சமுதாயத்தினுடைய அபிமானத்தையும்.பெருமதிப்பையும் பெற்ற ஒருவர் அனைவரின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவர் தொடக்கியிருக்கின்றார். அதனாலே அவருக்கு ஆதரவு உண்டு. அதன் மூலமாக ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கையின் ஏனைய பாகங்களில். வட கிழக்கு மாகாணங்களில் ஏனைய பாகங்களைப் பொறுத்தவரையில் இந்தவிதமான முயற்சிகளை மேற்கொள்ள முடியும் என்றால் அங்கு பெருந்தொகையான தொல்பொருள் சின்னங்கள் இருக்கின்ற பொழுதிலும் முன்வருவார் எவரும் இல்லை.

அங்கும் செல்வந்தர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் வெளிநாடுகளில் உள்ளவர்கள் இந்த முயற்சிகளை மேற்கொண்டால் பிராந்திய வேறுபாடு இன்றி உதவி செய்யக்கூடியவர்களும் இருக்கின்றாரகள். ஆனால் பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற நிலை இருக்கின்றது. ஒரு தொல்லியல் தொடர்பான அருங்காட்சியகத்தை அமைப்பதே வலு சிரமமாக இருக்கின்றது. ஹிஸ்புல்லாஹ் காத்தான்குடியில் ஒரு இஸ்லாமிய அருங்காட்சியகத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இதை முன்னுதாரணமாகக் கொண்டு மற்றவர்கள் ஏன் இதை செய்ய முடியாது?

**கேள்வி–தமிழினத்தின் தொன்மைச் சான்றுகளை அழிவிலிருந்து காப்பாற்ற தற்போதைய சூழலில் நாம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நீங்கள் கருதுகின்றீர்கள்?**

பலவிதமான வழிகளில் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஒன்று குறிப்பாக தொல்லியல்துறை திணைக்களமே இதற்கு பொறுப்பாக இருப்பதால். அவர்களை இந்தச் சின்னங்களை உரிய முறைப்படி பேணிக் கொள்வதற்கும். ஈடுபாடு உள்ளவர்கள் பார்த்து ஆராய்வு செய்வதற்கு அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

அத்தோடு தொல்பொருள் சின்னங்கள் இருக்கும் இடங்களில் வேறு நாடுகளைப் போல உரிய கட்டிடங்களை அமைப்பதற்கோ அவற்றை அடிப்படையாகக் கொண்டு குடிகளை நிறுவுவதையோ தவிர்க்க வேண்டும். வழிபாட்டு சின்னங்கள் அவை எந்தச் சமயத்தைச் சேர்ந்தாலும் ஒரு பொதுவான கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும். மற்றது பொது மக்கள் தம்மால் இயன்ற வரை இவற்றை அடையாளப்படுத்தி பாதுகாப்பதற்கான ஒரு வழிமுறையை உருவாக்க வேண்டும்.

இவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதேச சபை மட்டத்திலும். மாகாண சபை மட்டத்திலும். பாராளுமன்றத்திலும் அங்கத்தவர்களாக இருக்கிறவர்களுக்கு அதிகபட்ச வலியுறுத்தல்களை வழங்க வேண்டும். ஏனெனில் இவர்களுக்கு இயலுமான வகையில் இவை தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளக்கூடிய சாத்தியங்கள் உண்டு. அதிகாரம் இல்லை என்பது வேறு விடயம்.

ஆனால் இவற்றைப் பற்றி பேசக்கூடிய சாத்தியங்கள் உண்டு. அதேபோல பிரதேச சபை மாகாண சபைகள் ஊடாக இப்பொழுது அடையாளம் காணப்பட்ட சின்னங்களை எல்லாம் எடுத்து பாதுகாப்பாக வைப்பதற்கு வழிவகை தேட வேண்டும். ஆலயங்கள் குறிப்பாக முன்னேஸ்வரம்.மாவிட்டபுரம். வன்னியிலுள்ள கோயில்கள் அகஸ்தியர் ஸ்தாபனம். போன்றவை கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரம் போன்றவை தங்களின் வசமுள்ள எஞ்சியுள்ள பொருட்களையாவது பாதுகாப்பதற்கு கோவில்களில் அருங்காட்சியகங்களை உருவாக்கி பாதுகாப்பாக வைத்துக் கொள்ளலாம்.

**வெல்லாவெளி**

கொக்கட்டிச்சோலையிலுள்ள தேர்களே அருங்காட்சியகத்திற்குரியதாகி விட்டன. இவற்றை அழிவிலிருந்து பாதுக்க வேண்டுமானால். அவற்றிற்கு நிரந்தரமாக ஒரு கொட்டகைகளை அமைத்து ஒரு ஆலய அருங்காட்சியகத்துடன் இணைத்து வைத்திருப்பது தான் ஒரேயொரு வழி. அல்லாவிட்டால் அதிலிருக்கும் சிற்பங்கள் அழிந்து சிதைந்து பலரும் எடுத்துக் கொண்டு போய் பயன்படுத்துவர். இதேபோல் செங்கட்டிகள். கருங்கல். உலோகப் பொருட்கள் என பல உண்டு. இவற்றை பாதுகாக்க வேண்டும். இவற்றை விற்கக் கூடாது.

இதுவரை காலமும் தொல்பொருள் சின்னங்களை அதாவது உலோகப் பொருட்களை வெறும் தகட்டின் பெறுமானங்களுக்கு வியாபாரிகளுக்கு விற்பதுண்டு. ஆலய நிர்வாகத்தினரும் இந்த குற்றகாரியத்தை செய்துள்ளனர். இனியாவது இதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். மற்றது மலைகள். மலைப்பாறைகளிலுள்ள தொல்பொருள் சின்னங்கள் மிக வேகமாக தகர்க்கப்படுகின்றன.

இதை தடை செய்வதற்கான வழிவகைகளை பல மட்டங்களிலும் தேடிக்கொள்ள வேண்டும். இங்கே வாகரை. கதிரவெளியில் சில மலைகளிலே வாசகங்கள் எழுதப்பட்ட கற்பாறைகள் உண்டு. இருந்தும் அவை முற்காலத்தில் நாகர்களுடைய வாழ்விடங்களாக.கோட்டைகளாக இருந்துள்ளன.

இவற்றைப் பற்றி எவரும் அறிந்திருக்கவில்லை. தொல்லியல் திணைக்களமும் அக்கறை கொள்வதாக இல்லை. அவர்களுக்கு இங்கு கல்வெட்டு இருப்பது தெரியாது. இவர்களெல்லாம் மாற்றான் பால் மனப்பான்மையோடு இருப்பதால். இலங்கையில் அரச திணைக்களங்களுக்கும். தனியார் நிறுவனங்களுக்கும் கற்களை வழங்குபவர்கள் பெரிய இயந்திரக் கருவிகளைக் கொண்டு கணப்பொழுதில் உடைத்து விடக்கூடிய நிலை காணப்படுகின்றது.

அவர்களுக்கு பொருள் தான் தேவை. தொல்பொருள் சின்னங்கள். வரலாறுகள் பற்றி எந்த தேவையும் இல்லை. அக்கறையும் இல்லை. குரங்கு கொடி போட்ட மலை என்று வாகரைப் பிரதேச எல்லையில் காணப்பட்டது. அதிலே எழுத்துப் பொறித்த பல கற்கள் இருந்தன. மேலே இருந்த பௌத்த பள்ளி இடிபாடுகளாகி விட்டது. ஆனால் அதில் ஒரு பாகத்திலிருந்த நாகக் கல் அளவிலே பெரியது. பிரமாண்டமானது. தூரத்திலிருந்து காணக்கூடியதாக இருந்தது. 2 வருடங்களின் பின் போனால் மலையும் இல்லை. மலை அடிவாரமும் இல்லை.

11ஆம் பக்கம் பார்க்க...

07ஆம் பக்க தொடர்ச்சி...

ஆகவே இந்த இடத்தில் வடக்குக் கிழக்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ன செய்ய வேண்டும்? அதுவும் எழுபது ஆண்டுகள் அரசியல் போராட்டம் நடத்தி இன்று பாதுகாப்பற்ற அரசியல் சமூகமாகவும், அரசற்ற மற்றும் அரசியல் அதிகாரமற்ற சமூகமாகவும் இருக்கும் நிலையில் செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள் என்ன? பொருளாதார நெருக்கடியின் பின்னரான சூழலில் பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் சிதைவடைந்து வெவ்வேறாகப் பிரிந்துள்ள நிலையில், மீண்டும் தம்மை ஒரு அணியாகவும் ஒருமித்த குரலிலும் செயற்படும் உத்திகளை கையாள முற்படும் இச் சூழலில், தமிழ்த்தேசியக் கட்சிகள் வெறுமனே கைகட்டி அதனைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அல்லது பேச்சுக்கு வாருங்கள் என்ற ரணிலின் அழைப்புத் தொடர்பாகத் தங்களுக்குள் முட்டிமோதிக் கொண்டும், அது பற்றிக் கூடிய ஆராய்ந்தும் காலத்தைக் கடத்தப் போகின்றனரா? அப்படிக் காலத்தைக் கடத்தும் உத்தியாகவே ரணிலும் பேச்சுக்கான அழைப்பை விடுத்திருக்கவும் கூடும். ஏனெனில் அன்னம் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவது குறித்துத் தீவிரமாக ஆலோசித்து வரும் வேளையில், அதுவும் சிங்கள இனவாத கட்சிகளுடன் கூட்டுச் சேர முற்படும் நிலையில் பேச்சுக்கான அழைப்பு என்பது, காலத்தைக் கடத்தும் செயற்பாடுதான் என்பது வெளிச்சமாகிறது.

அத்தோடு தமிழ்த் தேசியக் கட்சிகளையும் ஜெனீவா மனித உரிமைச் சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தையும திசை திருப்பித் தமது இலங்கை ஒற்றையாட்சி என்ற கட்டமைப்பைப் பலப்படுத்தும் காய் நகர்த்தல்களை கன கச்சிதமாக ரணில் முன்னெடுக்கிறார் என்பதும் ஏற்கனவே தெரிந்து கொண்ட காரியம். டளஸ் அழகபெரும தலைமையில் இயங்கும் முன்னாள் பெதுஜனப் பெரமுனக் கட்சி உறுப்பினர்களின் அணி ஆட்சியமைக்கும் அளவுக்கு எந்த ஒரு தேர்தல்களிலும் பெருமளவு ஆசனங்களைப் பெறக்கூடிய நிலைமை இல்லை. ஜே.வி.பி இணைந்து போட்டியிட்டால் கூட அது சாத்தியமாகக் கூடிய தன்மைகள் மிகக் குறைவு. சர்வதேச நாணய நிதியம் மற்றும் அமெரிக்க இந்திய அரசுகள் உள்ளிட்ட சர்வதேச நாடுகளிடம் இருந்து பெருமளவு நிதியைப் பெறும் நோக்கிலும் மேற்படி உத்திகளைக் கையாண்டு, இலங்கையின் இறைமையை, 2009 இல் இழந்த சர்வதேச ஆதரவுகளையும் ரணில் மீளக் கட்டியெழுப்புகிறார்.

2009 இற்குப் பின்னரான பதின்மூன்று வருடங்களிலும் தமிழ்த்தரப்பு ஒருமித்த குரலில் செயற்படவில்லை. ஆனால் இனிமேலாவது ஒருமித்த குரலில் செயற்பட வேண்டும் என்ற அவசியத்தை ரணில் மேற்கொள்ளும் மேற்படி நகர்வுகள் உணர்த்துகின்றன. ஆனால் எந்த ஒரு தமிழ்த் தேசியக் கட்சியும் அது பற்றிப் புரிந்துகொள்வதாக இல்லை. அடுத்த ஆண்டின் முற்பகுதியில் ஏதாவது ஒரு தேர்தல் வரும் என்பதை ரணிலின் மேற்படி நகர்வுகள் கோடி காட்டுகின்றன.

ரசிய - உக்ரெயன் போர்ச் சூழல், அதனால் மாறிக் கொண்டிருக்கும் உலக அரசியல் ஒழுங்குகள், அதனை மையமாகக் கொண்ட வல்லரசு நாடுகளின் பனிப்போர் ஆகியவற்றை மிக நுட்பமாக அறிந்து, இலங்கையின் முக்கியத்துவத்தை ரணில் உயர்த்துகிறார். அதற்கேற்ப அமெரிக்க - இந்திய அரசுகளும் ஒத்துழைக்கின்றன. சீனாவிடம் இருந்து பெறும் பெருளாதார உதவிகள் இந்தோ - பசுபிக் விவகாரத்தில் அமெரிக்க இந்தியா அரசுகளைப் பாதிக்காத தன்மையோடு ரணில் காய் நகர்த்துகிறார்.

இச் சூழலைப் பயன்படுத்தித் தன்னைப் பிரதான எதிர்க்கட்சியாக மாற்ற வேண்டும் என்ற நோக்கில் ஜே.வி.பி கையாளும் உத்திகளைக் கூடத் தமிழ்த்தேசியக் கட்சிகள் இதுவரை படிக்கவில்லை. இப் பின்னணியில் 2009 மே மாதம் போரை மகிந்த வெற்றி கொண்டது போன்று, 2023 மார்ச் மாதம் ரணில் அரசியல் ரீதியாகத் தமிழ்த்தரப்பை வெற்றி கொள்வார் என்பது கசிந்துள்ளது. சர்வதேசம் ரணிலைக் கையாளும் முறைகளும், ரணில் சர்வதேசத்தை அணுகும் விதமும் அதனை வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் கோட்டாபய ராஜபக்சவைத் துரத்திய சிங்களவர்களின் வாய்களும் மூடப்படும். இந்த நுட்பமான அணுகுமுறைதான், தேசம் என்ற நோக்கில் ஒருமித்த குரலில் செயற்படுதல் என்பதைக் குறிக்கும். ஒற்றை மனிதனாக நின்று ரணில் கையாண்டு வரும் நுட்பமான அணுகுமுறையை 2009 இற்குப் பின்னரான அரசியல் சூழலில் தமிழ்த் தரப்பு கையாண்டிருக்க இருக்க வேண்டும். வெறுமனே தேர்தல் அரசியலுக்குள் முடங்கியதால் உள்ளக முரண்பாடுகளை மாத்திரமே வளர்த்துக் கொள்ள முடிந்தது. ஆனாலும் சந்தர்ப்பங்கள் காத்திருக்கின்றன. நுட்பமாகக் கையாள ஒழுங்கான தலைமை தான் இல்லை.

10ஆம் பக்க தொடர்ச்சி...

கீழே நீர் தேங்கி நிற்கும் ஒரு பள்ளம் தான் தெரிகின்றது. மற்ற மலைப்பாறைகளை மிக விரைவிலே அழித்து விடுவார்கள்.

வெல்லாவெளி வெள்ளி மலையிலே நாகர்கள் அமைத்த நீர்த் தடாகம் ஒன்று இருந்தது.அதிலே வருடத்தின் எல்லா மாதங்களிலும் நீர் தேங்கி நிற்கும். விளிம்புகளில் தமிழ் வசனங்கள் எழுதப்பட்டிருந்தன. என்ன விபரீதம் என்றால் இந்து சமய கலாசார திணைக்களத்திடம் கோவில் கட்டுவதற்கு 10 இலட்சம் ரூபாவை பெற்ற அங்கிருந்த கோயில் நிர்வாகிகள் தேர் ஓடும் வீதியை அமைப்பதற்கு இந்தச் சின்னங்கள் தடையாய் இருப்பதாகக் கூறி இந்த சின்னங்களை அழித்து விட்டார்கள். இது ஒரு அலட்சியப் போக்கு.

அறிவின்மை எங்கள் சமூகத்தினுடைய அடிப்படையான சின்னங்களையே தொலைத்து விடுகின்றமை பெருமளவில் தண்டனைக்கும் கண்டனத்திற்கும் உரியது. அவற்றிற்கு வழிவகைகள் இல்லாததாலேயே இவர்கள் இவற்றை செய்வதற்கு துணிகின்றார்கள்.

## நற்சிந்தனைகள் தத்துவங்கள் பொன்மொழிகள்

1.எதிரி இல்லையென்றால் சண்டை இல்லை சண்டை இல்லையென்றால் வெற்றி இல்லை் வெற்றி இல்லையென்றால் மகுடம் இல்லை.

2. ஆரோக்கியத்தை பெற்றுள்ள ஒருவர் நம்பிக்கையை பெற்றுள்ளார் நம்பிக்கையைப் பெற்றுள்ள ஒருவர் எல்லாவற்றையும் பெற்றுள்ளார்.

3. தொலைவில் இருப்பதைப் பார்த்துக் தயங்குவதில் பயன் எதுவுமே இல்லை. அருகில் இருப்பதைச் செய்து முடிப்பதே தலையாய பணி.

4. நல்லவர்கள் செய்யும் உதவி, பூமிக்கடியில் இருக்கும் நீர்போல. தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாது. ஆனால், பூமியின் மேற்பரப்பில் பயிர்பச்சைகளை செழுமையாக வளரச்செய்யும்.

5. அனுபவம் என்பது ஒரு மனிதனுக்கு எப்படி ஏற்படுகிறது என்பது முக்கியமல்ல. அதைக் கொண்டு அவன் என்ன செய்கிறான் என்பதே முக்கியம்.

6. நீங்கள் யார் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா? கேட்பதை விட்டுவிட்டு செயல்படுங்கள் செயல்பாடு ஒன்றே உங்களை வரையறுக்கும்.

7. தனது இலக்கினை அடைவதற்கான சரியான அணுகுமுறை கொண்ட ஒருவனை எதுவும் தடுத்து நிறுத்த முடியாது தவறான அணுகுமுறை கொண்ட ஒருவனுக்கு இந்த பூமியில் எதுவும் உதவ முடியாது.

8. இரண்டு வார்த்தைகளில் சொல்லவேண்டிய விஷயத்தை ஒரே வார்த்தையில் சொல்ல முடிந்தால் அதுதான் விலைமதிக்க முடியாத திறமை.

9. நெருக்கடி நிலையிலும் நிதானமிழக்காமல் அமைதியாக முடிவெடுப்பது உற்சாகமான சூழ் நிலையில் சம நிலை இழக்காமல் இருப்பது யாரையும் திருப்திபடுத்த தனக்கு விருப்பமில்லாத செயல்களில் ஈடுபடாமலிருப்பது இவையே உண்மையான தலைவனின் குணாதிசயங்கள்.

# உலக எயிட்ஸ் தினம்

**உலக எயிட்ஸ் தினம்**

1988-முதல் அனுசரிக்கப்பட்டு வரும் உலக எயிட்ஸ் தினமானது, எச்.ஐ.வி எனும் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் விதமாகவும், எயிட்ஸ் நோயால் இறந்தவர்களை கௌரவபடுத்தும் விதமாகவும் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 1 ஆம் திகதி அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்த தினமானது எச்.ஐ.வி-ஆல் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இறந்தவர்களுக்கும் அஞ்சலி செலுத்தும் நாளாக அனைவராலும் அனுசரிக்கப்படுகிறது.

**விழிப்புணர்வு ஏற்படுத்தும் நாள்**

1988 ஆம் ஆண்டு இந்த தினமானது "முதல் சர்வதேச சுகாதார தினமாக" நிறுவப்பட்டது. இந்த நாளானது எச்.ஐ.வி பரிசோதனை, நோய் தடுப்பு, அனைவரிடம் உள்ள ஏற்றத்தாழ்வுகளை தடுக்க, உலக அளவில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நாளாக கருதப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் இது குறித்து பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. உலக எயிட்ஸ் தினம் ஆனது 1987ஆம் ஆண்டு, முதன் முதன் முதலாக அங்கீகரிக்கப்பட்டது.

இதன் நோக்கமானது தேசிய மற்றும் உள்ளூர் அரசாங்கங்கள் , சர்வதேச நிறுவனங்கள் ,மற்றும் தனிநபர்களுக்கிடையே எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் பற்றி விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவது ஆகும்.

**யாரால் தொடங்கப்பட்டது?**

சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் உள்ள உலக சுகாதார நிறுவனத்தின் அதிகாரிகளான ஜேம்ஸ் டபிள்யூ.பன் மற்றும் தாமஸ் நெட்டர் என்பவர்களால் உலக எய்ட்ஸ் தினமானது தொடங்கப்பட்டது.

1996 முதல் UNAIDS (எச்.ஐ.வி/எயிட்ஸ் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அமைப்பு)உலக எயிட்ஸ் தினத்தை ஒருங்கமைக்கவும் மற்றும் இது பற்றி விளம்பரம் செய்யும் பொறுப்புகளையும் கொண்டுள்ளது.

இதன்பின்னர் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், டிசம்பர் 1ஐ உலக எயிட்ஸ் தினமாக நவம்பர் 30.2017 அன்று அறிவித்தார்.

**நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை**

2021 ஆம் ஆண்டின் இறுதியில் எடுக்கப்பட்ட நிலவரப்படி எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை சுமார் 38.4 மில்லியன் ஆக இருந்தது.


இவர்களில் மூன்றில் இரண்டு பங்கு (25.6 மில்லியன்) ஆப்பிரிக்காவில் வாழ்கின்றனர். இங்கிலாந்து நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் 4,139 பேருக்கும் மேலாக எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

கல்வி மற்றும் விழிப்புணர்வு இவைகளால் மட்டுமே எய்ட்ஸ் நோயை தடுக்க முடியும் என்று நாடகங்கள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவது இந்த நாளின் நோக்கமாகும்.

இந்த ஆண்டின் உலக எயிட்ஸ் தினத்தின் முக்கிய நோக்கம்(தீம்), 'சமமாக்குதல்(Equalize)' என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி எச்.ஐ.வி நோயினால் மக்களிடையே வரும் ஏற்ற தாழ்வுகளை குறைக்கவும், எயிட்ஸ் நோயை முற்றிலும் ஒழித்து மக்களை காக்க நாம் அனைவரும் ஒன்றாக செயல்பட வேண்டும் என்பதாகும்.





# பல்சுவை கதம்பம்



## சருமத்தை பாதுகாக்கும் ரோஸ் வாட்டரை எப்படி பயன்படுத்துவது?

கோடைக்காலத்தில் ஏற்படும் சரும பிரச்சனைகளை சரிசெய்ய ரோஸ் வாட்டரை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை இதில் பார்ப்போம்.

ரோஸ் வாட்டரில் கிருமி நாசினி பண்புகளும் உள்ளன. இது தவிர பாக்டீரியா எதிர்ப்பு பண்புகளையும் கொண்டிருப்பது சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

கோடை காலத்தில் ஏற்படும் வெப்பம் காரணமாக உடலில் நீர்சத்து குறையும். இதனால் சருமம் பாதிப்புக்குள்ளாகும். சரும எரிச்சல், தடிப்புகள் போன்ற பிரச்சனைகள் உருவாகும். இந்த பிரச்சினைகளுக்கு ரோஸ்வாட்டர் நல்ல தீர்வு தரும்.

ரோஜா இதழ்களை நீரில் கொதிக்கவைத்து வடிகட்டி தயாரிக்கப்படும் ரோஸ் வாட்டரில் பல ஆரோக்கிய நன்மைகள் கொண்டது. இதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் சருமத்தை பாதுகாக்கும்.

காட்டன் பஞ்சுவில் ரோஸ் வாட்டரை நனைத்து கண்களின் புருவம், அடிப் பகுதியில் தடவுவதன் மூலம் கண் சோர்வை போக்கலாம்.

ரோஸ் வாட்டர் அலர்ஜி எதிர்ப்பு பண்புகளை கொண்டது. சரும எரிச்சல், சருமத் தடிப்புகள், கண்கள் சிவத்தல், வீக்கம் அடைதல் போன்ற பிரச்சனைகளுக்கு நிவாரணம் தரும். ரோஸ் வாட்டரை சருமத்தில் தடவுவதன் மூலம் சரும செல்கள் வலுப்பெறும்.

சருமத்தில் சுரக்கும் அதிகப்படியான எண்ணெய் பசைத்தன்மையை கட்டுப்படுத்தி சருமத்தின் பி.எச். சமநிலையை பராமரிக்கவும் ரோஸ் வாட்டர் உதவும். வெட்டு காயங்கள், வடுக்கள், தீக்காயங்கள் போன்ற பிற காயங் களுக்கு சிகிச்சை அளிக்க ரோஸ் வாட்டர் உதவுகிறது.

ஒரு பவுலில் ஒரு ஸ்பூன் கிராம்பு தூள், ஒரு ஸ்பூன் ரோஸிவ் வாட்டர் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும். இந்த கலவையை இரவில் தூங்குவதற்கு முன்பு முகத்தில் பருக்கள் உள்ள இடத்தில தடவ வேண்டும். மறுநாள் காலை குளிர்ந்த நீரால் முகத்தை கழுவுங்கள். இவ்வாறு வாரத்திற்கு இரண்டுமுறை செய்துவந்தால் முகத்தில் உள்ள பருக்கள் மறைந்துவிடும்.

தினமும் குளிக்கும்போது தண்ணீரில் சிறிதளவு ரோஸ் வாட்டரை கலந்து குளித்து வந்தால் சருமத்திற்கு நல்ல பொலிவை கொடுக்கும். வரட்சியான சருமம் உள்ளவர்கள் அந்த ரோஸ் வாட்டர் பயன்படுத்தினால், நல்ல மிருதுவான சருமத்தை பெறலாம்.



### கொலஸ்ட்ராலை வேகமாக கரைக்கும் 5 இயற்கை உணவுகள்

1. மீன் சாப்பிடுங்கள்: மீனில் உள்ள ஒமேகா-3 கொழுப்பு அமிலம் கொலஸ்ட்ரால் அளவை சமநிலைப்படுத்த உதவுகிறது. இதற்கு, டுனா, சால்மன், டிராட் மற்றும் மத்தி மீன்களை சாப்பிட்டால் நன்மை பயக்கும்.

2. தினசரி உடற்பயிற்சி அவசியம்: தினமும் உடற்பயிற்சி செய்வது கெட்ட கொலஸ்ட்ராலைக் குறைக்க உதவும். இது ஒரு சிறந்த வழியாகும். இதற்காக, ஓட்டம், நடைபயிற்சி, நீச்சல், கார்டியோ, யோகா மற்றும் நடனம் ஆகியவற்றை செய்யலாம்.

3. டிரான்ஸ் கொழுப்புகளை சாப்பிட வேண்டாம்: உங்கள் தினசரி உணவில் இருந்து நிறைவுறாத கொழுப்புகளை அகற்றவும், ஏனெனில் இது கொலஸ்ட்ரால் அளவை கணிசமாக அதிகரிக்கிறது. அதற்கு பதிலாக, பால், பாலாடைக்கட்டி மற்றும் பால் பொருட்களை சாப்பிடுங்கள், இதில் இயற்கையான டிரான்ஸ் கொழுப்பு உள்ளது.

4. சிகரெட் மற்றும் மதுவை கைவிடுங்கள்: புகைபிடித்தல் மற்றும் மது அருந்துதல் பல நோய்களுக்கு அடிப்படையாகும். இதன் காரணமாக உடலில் கெட்ட கொலஸ்ட்ரால் அதிகமாக குவிந்து, மாரடைப்பு அபாயமும் அதிகரிக்கிறது.

5. கரையக்கூடிய நார்ச்சத்து சாப்பிடுங்கள்: கரையக்கூடிய நார்ச்சத்து சாப்பிடுவது இயற்கையாகவே கொழுப்பின் அளவைக் குறைக்கிறது. இதற்கு பீன்ஸ், பட்டாணி, ஓட்ஸ், பழங்கள் மற்றும் முழு தானியங்களை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

## ஒளிரும் பிங்க் நிற சருமத்தை பெற கடலை மாவை தேனுடன் கலந்து பயன்படுத்தனும்?

### சருமம் மென்மையாக...

சரும ஆரோக்கியத்திற்கும் அழகு தரக்கூடியவை. ஒரு கிண்ணத்தில் 2 ஸ்பூன் கடலை மாவை எடுத்துக்கொண்டு, ஒரு சிட்டிகை மஞ்சள் தூள் சேர்த்து நன்றாக கலக்க வேண்டும். பின்னர் சிறிதளவு தண்ணீர் ஊற்றி கலந்து முகத்தில் பூசி அரை மணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் முகம் கழுவி வந்தால் சருமம் மென்மையாகும்.

### பளிச்சென்ற தோற்றம் பெற..

அழகை பேணிக்காப்பதில் கடலை மாவு முக்கிய பங்கு வகிக்கிறது. பொலிவிழந்த சருமத்தை இளைமையூட்ட இரண்டு ஸ்பூன் கடலை மாவில் சிறிதளவு தண்ணீர் விட்டு கெட்டியாக பிசைந்து கொள்ளவும். பின்னர் முகத்தில் நன்றாக தடவி ஊற விடவும். நன்றாக உலர்ந்த பின்னர் குளிர்ந்த நீரில் முகம் கழுவினால் பளிச் என தோன்றும்.

### சோர்வான முகம்

சோர்வான முகம் சிலருக்கு முகம் எப்போதும் சோர்ந்து வாடியபடி இருக்கும். அந்த முகம் பொலிவாக இருக்கவும் கடலை மாவு உதவும். தோலுடன் இருக்கும் அரை கிலோ கடலை பருப்பு, துளசி இலை 50 கிராம், வேப்பங்கொழுந்து 5 கிராம் இவற்றை நிழலில் உலர்த்தி, நன்றாக அரைத்து கொள்ள வேண்டும். கிண்ணத்தில் இரண்டு ஸ்பூன் அரைத்த பொடியை போட்டு அதில் இரண்டு துளி எலுமிச்சை சாறு சேர்த்து முகத்திற்கு பூசி ஐந்து நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் முகத்தை கழுவினால் முகம் பொலிவாக காணப்படும். சோர்வு தெரியாது. வாரம் ஒரு முறை செய்தால் பள,பளவென முகம் பிரகாசமாக இருக்கும்.

### எண்ணெய் பசை சருமம்

சருமம் எண்ணெய் வழிந்து பிசு, பிசுப்பாக இருந்தால் அதற்கு கடலை மாவுடன் தயிர் சேர்த்து பேஷியல் போட்டால் முகம் அழகு பொலிவு பெரும். ஒரு கிண்ணத்தில் கடலை மாவை எடுத்து அதில் தயிர் . எலுமிச்சை சாறு ஊற்றி நன்றாக கலந்து முகத்தில் தடவ வேண்டும். சில நிமிடங்கள் ஊற வைத்து வெதுவெதுப்பான நீரில் கழுவினால் எண்ணெய் பசை நீங்கி முகம் பொலிவு பெறும்.

### வெயில் கருமையை போக்க..


வெயிலில் அடிக்கடி செல்பவர்களுக்கு, சூரிய ஒளி பட்டு முகம் கருப்பாகும். தேங்காய் பால் 1 ஸ்பூன், கடலை மாவு ஒரு ஸ்பூன் எடுத்து இரண்டையும் கலந்து பசை போல பிசைந்து, பின்னர் முகத்தில் பூச வேண்டும். உலர்ந்ததும் கழுவ வேண்டும். வாரம் இரு முறை இப்படி செய்தால் முகம் பிரகாசமாக இருக்கும்.

## சுடச்சுட வெங்காய பக்கோடா நம் வீட்டிலேயே எப்படி செய்வது?

**டீக்கடை பக்கோடா செய்ய தேவையான பொருட்கள்: சீரகம் – ஒரு டீஸ்பூன், மல்லி விதை – ஒரு டீஸ்பூன், பூண்டு பல் – 10, பெரிய வெங்காயம் – 4, மிளகாய்த் தூள் – அரை டீஸ்பூன், சீரகத் தூள் – அரை டீஸ்பூன், பெருங்காயத் தூள் – அரை டீஸ்பூன், கரம் மசாலாத் தூள் – அரை டீஸ்பூன், உப்பு – தேவையான அளவு, சமையல் சோடா – 2 சிட்டிகை, பச்சை மிளகாய் – 3, முந்திரி – 10, இஞ்சி பூண்டு பேஸ்ட் – ஒரு டீஸ்பூன், கடலை மாவு – 150 கிராம், அரிசி மாவு – ரெண்டு டேபிள் ஸ்பூன், கறிவேப்பிலை – இரண்டு கொத்து, எண்ணெய் – தேவையான அளவு.**

டீக்கடை பக்கோடா செய்முறை விளக்கம்: மொறுமொறுவென்று டீக்கடை வெங்காய பக்கோடா செய்ய முதலில் 10 பூண்டு பற்களை தோலுடன் இடித்து வைத்துக் கொள்ளுங்கள். பின்னர் ஒரு இடி கல்லில் அல்லது மிக்ஸியில் சீரகம் மற்றும் மல்லி விதைகளை சேர்த்து கொரகொரவென்று அரைத்து எடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் ஒரு வாயகன்ற பாத்திரத்தில் தோல் உரித்து மெல்லியதாக நீளவாக்கில் நறுக்கிய 4 வெங்காயத்தை உதிர்த்து போட்டுக் கொள்ளுங்கள். பின்னர் வெங்காயத்துடன் மிளகாய்த்தூள், சீரகத்தூள், கரம் மசாலாத் தூள், பெருங்காயத் தூள் ஆகிய மசாலா தூள்களை சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். பின்னர் தேவையான அளவிற்கு உப்பு மற்றும் நீங்கள் இடித்து வைத்துள்ள பூண்டு மற்றும் சீரகம், மல்லி ஆகியவற்றை சேர்த்து நன்றாக கலந்து கொள்ளுங்கள். விருப்பம் இல்லை என்றால் நீங்கள் பூண்டு சேர்க்க தேவையில்லை. அதற்கு பதிலாக இஞ்சி, பூண்டு பேஸ்ட் ஒரு டீஸ்பூன் அளவிற்கு சேர்த்து கொள்ளலாம். பூண்டு சேர்ப்பவர்கள் கொஞ்சம் குறைவாக இஞ்சி, பூண்டு பேஸ்ட் சேர்த்துக் கொள்ளுங்கள். பின்னர் இவற்றுடன் 3 பச்சை மிளகாய்களை பொடிப்பொடியாக நறுக்கி சேர்த்துக் கொள்ளுங்கள். 10 முந்திரி பருப்புகளை பொடித்து சேர்க்கலாம். பக்கோடா உடன் முந்திரி பருப்பு சேர்ந்து வந்தால் இன்னும் சுவையாக இருக்கும். முந்திரி பருப்பு இல்லை என்றால் அதனை தவிர்த்து விடலாம். 150 கிராம் அளவிற்கு கடலை மாவை சேர்த்து நன்கு கலந்து கொள்ளுங்கள்.

கடலை மாவுடன் பக்கோடா கிரிஸ்பியாக வருவதற்கு அரிசி மாவு 2 டேபிள்ஸ்பூன் அளவிற்கு சேர்த்துக் கொள்ளலாம். கொழுக்கட்டை, இடியாப்பத்திற்கு செய்யும் பச்சரிசி மாவு தான் இது. அரிசி மாவு சேர்த்தால் வெங்காய பக்கோடா கிரிஸ்பியாக வரும். இப்போது எல்லாவற்றையும் ஒன்றுடன் ஒன்றாக நன்கு கலந்து விட்டு கொள்ளுங்கள். கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீரை தெளிக்க வேண்டுமே தவிர மொத்தமாக ஊற்றி விடக்கூடாது. வெங்காயத்துடன் இந்த பொருட்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதற்கு ஈரப்பதம் தேவை. அதற்காக ஸ்பூன் அளவில் கொஞ்சமாக தண்ணீரை தெளித்து கலந்து விட்டால் போதும். நன்கு இவை கலந்தவுடன் அடுப்பை பற்ற வைத்து அதில் ஒரு வாணலியை வையுங்கள். அதில் தேவையான அளவிற்கு எண்ணெய் ஊற்றி காய விடுங்கள். எண்ணெய் நன்கு காய்ந்ததும் அடுப்பை மீடியமாக வைத்துக் கொண்டு பிசைந்து வைத்துள்ள பக்கோடாவை உதிர்த்து போட்டு எல்லா இடங்களிலும் பொன்னிறமாக வேக வறுத்து எடுக்க வேண்டியது தான். அதன் பிறகு கடைசியாக ரெண்டு கொத்து கறிவேப்பிலையை எண்ணெயில் போட்டு பொரித்து பக்கோடா மீது தூவி பரிமாறினால் அட்டகாசமான சுவையுடன் டீக்கடையில் கொடுக்கப்படும் மொறுமொறு பக்கோடா தயாராகிவிட்டது.



# சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தும் போது சமூகமாற்றம் சாத்தியப்படும்



இனப்பிரச்சினை நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மையினரின் மத்தியில் அபிவிருத்தி பாதையில் தடைக்கல்லாக உள்நாட்டு அரசியல் அதிகாரம். ஐக்கிய தேசிய கட்சி சிறீலங்கா சுதந்திரக்கட்சி என்ற 02 பிரதான கட்சிகளுக்கு இடையே மாறி மாறி ஆட்சிக்கு வருவது ஜனநாயக நோக்கில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும் பொருளாதார அபிவிருத்திக்கு இது சாதகமாக இல்லை என்றே குறிப்பிடலாம்.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள் என இனரீதியான பிளவினையும் சிங்களம், தமிழ் என்ற மொழி ரீதியான பிரிவினையும் வடக்கு கிழக்கு, மலையகம் கண்டியர்,கரையோரத்தினர் என்ற பிரிவினைகளும் மதம் போன்ற விடயங்களும் உள்நாட்டு அரசியலில் காலத்துக்குக் காலம் மாறிவரும் பொருளாதார அபிவிருத்தி, வாழ்க்கைத்தர முன்னேற்றம் என்பதை விட சமயம் இனம், மொழி என்பவற்றின் ஊடாக ஆட்சி அதிகாரத்தினை தொடர்ந்து சிறுபான்மை மக்கள்மேல் அபிவிருத்தி பாதையில் உள்நாட்டு அரசியல் சூழலானது தடையாக உள்ளது.

நிதி,சுற்றுலா அபிவிருத்தி, மாகாண அபிவிருத்தி நகர திட்டமிடல், சுகாதாரம், போசாக்கு, சுதேச மருத்துவ,தொழில்துறை அபிவிருத்தி ,உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி , கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலம் இடம்பெயர்ந்துள்ளவர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி , கைத்தொழில் ,கமத்தொழில், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில், நீரகவள மூல அபிவிருத்தி , நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி, பெற்றோலிய வள அபிவிருத்தி , பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவ, கிராமிய பொருளாதார அலுவல்கள் ,காணி, பாராளுமன்ற மறுசீரமைப்பு ,வீடமைப்பு, நிர்மானத்துறை, கலாசார அலுவல்கள் ,போக்குவரத்து, சிவில் விமானசேவைகள், சமூக அபிவிருத்தி ,மகளிர், சிறுவர் அலுவல்கள், உலர் வலய அபிவிருத்தி நீதி , சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு , கல்வி , தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு தொழில் வாய்ப்பு, விளையாட்டுத்துறை அமைச்சர், தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக முன்னேற்றம், இந்து சமய அலுவல்கள் அமைச்சர், தொழில், தொழிற்சங்க உறவுகள், சமூக வலுவூட்டல் , அபிவிருத்தி திறமுறை, சர்வதேச வர்த்தகம் போன்றவற்றில் பெரும்பான்மை மக்களை அரச அதிகாரிகளாக்கி நாட்டின் தேசியத்தை சிங்களத் தேசியமாக மாற்றுகின்ற கொள்கை கொண்ட தமிழர்களை அமைச்சர்களாகவும்,அரசியல் வாதி பௌத்தத்தினையும் அவர்கள் சார்ந்த பெரும்பான்மை இனத்திற்கும் ஆதரவு நல்கிறாரோ இத்தகைய தமிழ் தலைவர்கள் உயர்நிலையில் வைத்து போற்றப்படுகின்றனர்.

இலங்கையின் சிறுபான்மை மக்களுக்கு அடிப்படை உரிமை மறுக்கப்பட்ட போதும் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு ஜனநாயக சுதந்திரம் காணப்படுகிறது. போரின் பின்னர் தற்காலத்தில் தமிழர் தாயகத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பௌத்த மதப்பரம்பல் சட்டவிரோத தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் புத்தர் சிலைகளின் பரம்பல் அதிகமாக உள்ளது. வடக்கு கிழக்கு நோக்கிய பௌத்தத்தின் நகர்வில் ஒன்றாகவே பௌத்த மதத்தினைப் பரப்பும் வகையிலே சிங்கள மக்கள் அற்ற தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் இனவாதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி பௌத்த துறவிகளின் அத்துமீறி அமைத்திடும் புத்தர் சிலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தமிழர்கள் செறிந்துவாழும் பல பகுதிகளில் தமிழ்மக்களுக்கு சொந்தமான பல காணிகளை அபகரித்து, ஆக்கிரமித்து சிங்கள குடியேற்றங்கள் வருகின்ற பகுதிகளிலும் அபகரித்து ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள படையினரின் ஒவ்வொரு முகாம்களிலும் புத்தர் குடியேறியுள்ளார். மக்கள் பரம்பரையாக வாழ்ந்த வாழ்வியல் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அவ்வாறான ஒரு உள்நாட்டு அரசியல் சூழலானது இலங்கை பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைவதற்கு தடையாக உள்ளது.

உயர் பாதுகாப்பு வலயம் என்று கூறிய நிலங்களை சிங்கள மயமாக்கி புத்த விகாரைகள் அமைத்து பௌத்த பூமியாக்க மாற்றிட முனைகின்ற செயற்பாட்டினை செய்து வருகின்றார்கள். தமிழ் மக்களின் தனித்துவ குடிப் பரம்பலை மாற்றுவதற்கு தமிழ் மக்களின் குடியிருப்புகளுக்கு இராணுவத்தினர் தமிழ் பெயர்கள் இந்த வீதிகளின் பெயர்கள் மாற்றுவது அரசின் திட்டமிட்ட செயல். அதற்கு தமிழ் அரசியல் தலைமைகள் உடந்தையாக இருக்கின்றார்கள். இலங்கையில் அரசு பாரிய இனவாதத்தை தூண்டிவிட்டுக் கொண்டு தமிழர் வாழ் இடங்களில் பாதுகாப்பு என்று பெயரில் இராணுவ முகாம்களும் ஊருக்கு ஊர் இருக்கின்றது. மக்களின் வாக்குரிமையை பெறுவதற்காக நாட்டின் நீண்ட கால அபிவிருத்தியை நோக்காகக் கொள்ளாது குறுங்காலத்தில் மக்களை மகிழ்வித்து தமது வாக்கு வங்கியைப் பயன்படுத்தி அதிகாரத்தை கைப்பற்ற முயன்ற அரசியல் வாதிகள் இலங்கையை ஒரு பௌத்த நாடாக மாற்றுவதில் அதிகமான அக்கறை கொண்டுள்ளனர்.

மாணவர் சமூதாயத்தினை கல்வி அறிவில் முன்னேற்றுதல் அவர்கள் எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய ஆளுமையும் திறனும் கொண்டவர்களாக உருவாக்க வேண்டிய இலங்கை அரசு தமிழருடைய கல்வி முன்னேற்றத்திற்கு தடையாக தரப்படுத்தல் என பின்னால் இன முரண்பாடு இனவாத அரசியல் செறிந்ததுள்ளது. 04ம் திகதி ஆடி மாதம் 2019ம் ஆண்டு வடமாகாணத்தை அபிவிருத்தி பாதையில் முன்கொண்டு செல்வதற்கு கல்வியலாளர்கள், துறைசார் அனுபவஸ்தர்களின் திட்டங்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளும் முகமாக கௌரவ ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்களின் எண்ணக்கருவிற்கமைய "வடமாகாண வட்ட மேசை" கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது .

இதில் தற்போது மாகாணசபை கலைக்கப்பட்ட பின் கல்வி அமைச்சின் அனைத்து பொறுப்புக்களும் ஆளுநர் கைவசம் இருக்கும் நிலையில் அதனைவிட மாகாண சபைச் சட்டங்களின் படி நிதி மற்றும் நிர்வாகம் தொடர்பான அதிகாரங்கள் அனைத்தும் ஆளுநரிடமே வழங்கப்பட்டுள்ள நிலையில் வடமாகாணத்தின் அனைத்து நடவடிக்ககைகளுக்கும் பொறுப்பாக இருக்க வேண்டிய அதிகாரியான கௌரவ ஆளுநரே பொது வெளியில் வடக்கில் பாடசாலை ஒன்றில் 4 மாணவர்களுக்கு 12 ஆசிரியர்கள் கடமையாற்றுவதாக தனது வினைத்திறன் இன்மையினை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளமை வரவேற்கத் தக்க விடயமாகும். இருப்பினும் பல பாடசாலைகளில் கணிதம் ,விஞ்ஞானம் மற்றும் ஆங்கில பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் பல ஆண்டுகளாக இயங்கிவரும் பாடசாலைகளும் உண்டு என்பதையும் நினைவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது.

அரசியல் ரீதியான பிரச்சினைகள் ஒருபக்கம் இருக்கின்ற நிலையில், சமூக, பொருளாதார ரீதியில் அபிவிருத்தி என்ற தொனிப் பொருள் இன்று பரவலாக பேசப்பட்டுவரும் ஒரு விடயமாக இது காணப்படுகின்றது. போருக்குப்பின் வட கிழக்கில் மக்கள் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகள் பற்றிய பொதுப்படையான பார்வையுடன் நாட்டில் வாழும் மக்களின் வரலாறு, மரபுகள், சமூக அமைப்பின் பன்மைத்தன்மை, அரசியல் கலாசாரம், சிவில் சமூகத்தின் விழிப்புணர்வு, மக்களின் அரசியல் பங்கேற்பு பாதுகாப்பு, அரசியல் உரிமைகள், கௌரவம் மற்றும் கல்வி முதலான அம்சங்கள் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. நுண்நிதி கடன் நிறுவனங்கள் ஏராளமான வட கிழக்கில் உதயமாகி உள்ளது. இந்நுண்நிதி கடன் நிறுவனங்களில் கடன் பட்ட மக்கள் பலர் பாதிப்படைந்துள்ளனர். கடன்களை பெற்ற பெற்றோர்கள் கடன் வசூலிப்பாளர்களுக்கு பயந்து வீடுகளை விட்டு தலைமறைவாக வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்கள். குடும்பப் பிளவு ஏற்படுகிறது. இதனால் பிள்ளைகள் அநாதைகளாக்கப்பட்டு அவர்கள் சமூகத்தில் பாரிய சவால்களையும் இன்னல்களையும் எதிர்நோக்கி வருகின்றார்கள். கடன் பெற்ற பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோரும் செயற்பாடுகள் வெகுவாக அதிகரித்து காணப்படுகிறது. பெண்கள் உடல்,உள ரீதியாக வெகுவாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். அத்தடன் ஒரு சாரார் கடன் காரணமாகவே தற்கொலை செய்து வருகின்றார்கள்.

2009ம் ஆண்டிற்கு முன்னரும் பின்னரும் அபிவித்தி அடைந்த நாடுகள் என சொல்லப்படும் (லண்டன், சுவிஸ், பிரான்ஸ், ஜெர்மனி, அவுஸ்ரேலியா,டென்மார்க், அமேரிக்கா) போன்ற நாடுகளில் உள்ள ஈழத்தமிழர்களிடம் பெருந் தொகையான நிதி பல நிகழ்வுகளுக்கூடாக சேர்க்கப்படுகின்றது. இந் நிதி பயன்பாட்டின் செயற்திட்டங்கள் என்ன? என்பது கிராம மட்டங்களில் உள்ள கிராமிய அமைப்புக்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். இவை எவ்வாறு கையாளப்படுகின்றது என்பது குறித்து புலம்பெயர்தேசத்தில் உள்ள மக்கள் ஈழத்தில் உள்ள மக்களின் தேவைகள் மதிப்பீட்டின் அடிப்படையில் சேவை செய்கின்றார்களா என சந்தேகம் எல்லார் மத்தியிலும் உள்ளது.

புலத்தில் சாங்கங்கள், அமைப்புக்கள், தனிநபர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர் ஒன்றியங்கள், தன்னர்புத்தொண்டர்கள், சிறு குழுக்கள் ஒன்றிணைந்து யுத்தத்தில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் தேவைகள் மதிப்பீட்டின் அடிப்படையில் அபிவிருத்திக்கு பயன் படுத்தியிருந்தால் தனிநபர், குடும்பம், கிராமம், பிரதேசம், மாவட்டம், மாகாணம் என இன்று பல அபிவிருத்தி நடவடிக்கைகளை பார்த்திருக்ககூடியதாக இருந்திருக்கும். உள்நாட்டுப் போரினால் காவுகொள்ளப்பட்ட உறவுகள் கொண்ட குடும்பங்கள் அதிகம், கந்தகத் துவள்களைச் சுமந்து வாழ்பவர்களும், ஆதரவற்று தனித்து விடப்பட்டவர்கள் உட்பட அனைவரது தேவைகளும் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. காலத்துக்குக் காலம் எமது உறவுகள் அடுத்த வேளை உணவுக்கு காத்திருந்து கையேந்தி நிற்க வேண்டிய தேவை இருந்திருக்காது.

உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் இருந்து பல வாழ்வாதார உதவித் திட்டங்களை தனிநபர்கள் குழுக்கள் நிறுவனங்கள் செய்து வருகின்றார்கள். அவர்களுக்கு நன்றி கூறுகின்ற அதேவேளை சில வாழ்வாதாரத் திட்டங்கள் தோல்வியில் செல்வதையும் சுட்டிக்காட்ட வேண்டும். வவுனியா வடக்கு-கனகராயன்குளம் பகுதியில் கணவன் மனைவி இருவரும் பல ஆண்டு காலம் போராளியாக இருந்த குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அவர்களில் 2009ம் ஆண்டு பாதுகாப்புவலயத்தில் இலங்கை இராணுவம் நடத்திய இனப்படு கொலையில் கணவன் இறந்து போக மூன்று பிள்ளைகளுடன் தோட்டம் செய்வதற்கு உகந்த சொந்த நிலப் பரப்புடன் வாழ்ந்து வந்த அந்த பெண் தலைமைத்துவக் குடும்பத்திற்கு வாழ்வாதர உதவி செய்திருந்தார்கள். அதில் ஒரு அமைப்பு எதுவித பயிற்சி, அனுபவமும் இல்லாத இக் குடும்பத் தலைவிக்கு தையல் இயந்திரம் வழங்கியிருக்கின்றார்கள். மீளவும் என்னுமொரு அமைப்பிடம் வாழ்வாதாரத்திற்கு உதவி செய்யுமாறு விண்ணப்பம் செய்திருந்தார். கள விஜயம் மேற்கொண்டு பார்த்தபோது தோட்டம் செய்வதில் ஆர்வத்துடன் சிறு வீட்டுத் தோட்டம் செய்து வரும் அவருக்கு முன்னர் ஒரு புலம் பெயர் அமைப்பு வழங்கிய தையல் இயந்திரம் வீட்டின் ஒரு மூலையில் மூடிக் கட்டி இருந்தது. ஏன் ? இவ்வாறு உள்ளது என வினாவியபோது தையல் தெரியாது என்பதைக் கூறியிருந்தார். இதே போன்று கிளிநொச்சி மாவட்டத்தில் கணவன் முள்ளிவாய்க்காலில் இராணுவத்தின் குண்டு பட்டு இறந்து போக மகன் ஒருவர் மாவீரராக வித்தாகிட, மகள் திருமணம் செய்து கணவருடன் அயல் கிராமத்தில் வாழ்ந்திட இளைய மகன் 2009ம் ஆண்டு இராணுவத்தினால் காணாமல் ஆக்கப்பட மகனைத் தேடி தனிமையில் வாழும் 58 வயது நிறைவான தாயார் ஒருவருக்கு நீர் இறைக்கும் இயந்திரமும் நீர்பாச்சும் குழாய்களும் வாழ்வாதாரத் திட்டமாகக் கொடுத்திருந்தார்கள். ஆனால் அவர் நாளாந்தம் தனக்குத் தேவைக்கான நீரை அரைக்கிலோமீற்றர் தூரத்தில் இருந்து எடுத்து வருகின்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டு கைகளையும் ஒரு கண்ணையும் இழந்து மறு கண் பார்வைக்குறைபாட்டுடன் வயது முதிர்ந்த தாயுடன் வாழ்ந்து வரும் முன்னால் பெண் போராளி ஒருவருக்கு பால் மாடு வாழ்வாதாரமாக வழங்கப்பட்டுள்ளது. வாழ்வாதாரம் கோரி புதிய விண்ணப்பம் கிடைத்ததைத் தொடந்து அந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் களவிஜயத்தின் போது அவரிற்கு வேறு ஒரு அமைப்பு மாடு வழங்கியது தெரிய வந்தது. அந்த மாட்டினை பராமரிக்க முடியாமல் தெரிந்தவர்கள் வீட்டில் விட்டுள்ளதாகக் அவர்களிடம் கூறியுள்ளார். இப்படி பல பல தனி நபர் வாழ்வாதாரத் திட்டங்கள் பொருத்தமற்ற முறையில் பொருத்தமற்ற நபர்களுக்கு வழங்கி இருப்பதனால் அவர்கள் மீள மீள தங்கள் நாளாந்த வாழ்க்கைக்காக வாழ்வாதாரத்தை எதிர்பார்க்கின்றார்கள்.

தேவைகள் மதிப்பீடு, பயிற்சி,அனுபவம், கற்றல், இடத்தெரிவு, எதுவும் இல்லாமல் எத்தனை திட்டங்களை வழங்கினாலும் அவை தோல்வியில் முடிவடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகிறது. எனவே மக்கள் இலகுவில் கிடைக்கும் நுண்நிதி கடன் நிறுவனங்களிடம் கடன் பெற்று நாளாந்த தேவைகளுக்கு பயன்படுத்திவிட்டு பல சொல்ல முடியாத இன்னல்களை அனுபவிப்பதை தடுக்கவேண்டுமாக இருந்தால் **நுண்நிதிக் கடன் பெறுவதை கட்டுப்படுத்தி சமூக அபிவிருத்தி ஊடாக மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.** பாதிப்புக்களை எதிர்கொள்ளாமல் இருக்க சட்ட ஏற்பாடு அல்லது கொள்கைகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**“தேவைகள் மதிப்பீடு, பயிற்சி,அனுபவம், கற்றல், இடத்தெரிவு, எதுவும் இல்லாமல் எத்தனை திட்டங்களை வழங்கினாலும் அவை தோல்வியில் முடிவடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகிறது.”**

தொடரும்...

நிலவன்

# விளையாட்டு செய்திகள்

## 283 ஓட்டங்களுடன் சகல விக்கெட்களையும் இழந்தது மேற்கிந்தியத் தீவுகள்



அவுஸ்திரேலியாவுடனான முதலவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது முதல் இன்னிங்ஸில் 283 ஓட்டங்களுடன் சகல விக்கெட்களையும் இழந்தது. அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட் இழப்புக்கு 598 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் துடுப்பாட்டத்தை நிறுத்திக் கொண்டிருந்தது.

2 ஆவது நாள் ஆட்டமுடிவில் மேற்கிந்திய அணி முதல் இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 74 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. போட்டியின் 3 ஆவது நாளில் அவ்வணி 283 ஓட்டங்களுடன் சகல விக்கெட்களையும் இழந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் கிறேத் ப்றேத்வெயட் 64 ஓட்டங்களையும் அறிமுக வீரர் டேஜாநாரின் சந்தர்போல் 51 ஓட்டங்களையும் பெற்றனர். வேறு எவரும் அரைச்சதம் பெறவில்லை. அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களில் பட் கம்மின்ஸ் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் மிசெல் ஸ்டார்க் 51 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

நேதன் லியோன் 61 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை வீழ்த்தினார். கெமரோன் கிறீன் 35 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ஜோஸ் ஹஷெல்வூட் 53 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். அன்று(02) மாலை தனது 2 ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி ஆட்டமுடிவின்போது ஒரு விக்கெட் இழப்புக்கு 29 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. உஸ்மான் கவாஜா 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தற்போது அவுஸ்திரேலிய அணி 344 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது.



## மிசெல் மார்ஷ் 3 மாதம் போட்டிகளில் பங்குபற்ற மாட்டார்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மிசெல் மார்ஷ் 3 மாத காலம் போட்டிகளில் பங்குபற்றமாட்டார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவரின் கணுக்காலில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டமையே இதற்கான காரணம்.

மிசெல் மார்ஷின் இடது கணுக்காலில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால், இருபது20 பிக்பாஷ் லீக்கில் நடப்புச் சம்பியனான பேர்த் ஸ்கோர்சஸ் அணி சார்பில் இவ்வருட பிக்பாஷ் போட்டிகளில் மார்ஷ் பங்குபற்ற மாட்டார்.

அதேவேளை, இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளின்போது அவர் மீண்டும் டெஸ்ட் அணியில் சேர்க்கப்படும் வாய்ப்பும் பாதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதங்களில் இந்தியாவுக்கு அவுஸ்திரேலிய அணி சுற்றுலா மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் தேர்வுக்குழுவின் தலைவர் ஜோர்ஜ் பெய்லி இது தொடர்பாக கூறுகையில், "மிசெல் மார்ஷ் எதுகுழாமின் முக்கியமான அங்கத்தவர். குணமடையும் காலத்தில் நாம் அவருக்கு ஆதரவு வழங்குவோம். எதிர்வரும் மார்ச் மாதம் இந்தியாவுடனான ஒருநாள் சர்வதேச தொடருக்கு அவர் சேர்க்கப்பட முடியும் என நாம் நம்புகிறோம்" என்றார்.

## டெஸ்ட் கிரிக்கெட்டில் புதிய சாதனை

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்டின் முதல் நாளான வியாழக்கிழமை முடிவில், இங்கிலாந்து 75 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 506 ஓட்டங்கள் குவித்து புதிய உலக சாதனை படைத்தது.

நாணய சுழற்சியை வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்த இங்கிலாந்தில் ஜாக் கிராவ்லி 21 பவுண்டரிகளுடன் 122, பென் டக்கெட் 15 பவுண்டரிகளுடன் 107, ஆலி போப் 14 பவுண்டரிகளுடன் 108 ஓட்டங்கள் விளாசி ஆட்டமிழந்தனர்.



ஜோ ரூட் 23 ஓட்டங்களுக்கு வெளியேற, வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் முன்னதாகவே முடித்துக் கொள்ளப்பட்டது. ஹாரி புரூக் 14 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உள்பட 101, தலைவர் பென் ஸ்டோக்ஸ் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பாகிஸ்தான் பௌலிங்கில் ஜாஹித் மஹ்முத் 2, ஹாரிஸ் ரௌஃப், முகமது அலி ஆகியோர் தலா 1 விக்கெட் சாய்த்தனர்.

காயம் காரணமாக பாகிஸ்தானின் பிரதான பௌலர் ஷாஹீன் அஃப்ரிதி பங்கேற்காத இந்த டெஸ்டில், 3 புதுமுக பௌலர்களுக்கு பாகிஸ்தான் வாய்ப்பளித்ததை இங்கிலாந்து பயன்படுத்திக் கொண்டது.

டெஸ்ட் வரலாற்றில் இதற்கு முன், கடந்த 1910 இல் தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக முதல் நாளில் அவுஸ்திரேலியா 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 494 ஓட்டங்கள் அடித்ததே அதிகபட்சமாக இருந்தது. தற்போது இங்கிலாந்து அதைக் கடந்து 506/4 ஓட்டங்கள் குவித்திருக்கிறது.

அதிவேகமாக 500 ஓட்டங்களை (74.4 ஓவர்கள்) எட்டிய அணியாகியிருக்கிறது இங்கிலாந்து. இங்கிலாந்து பேட்டர்கள் 4 பேர் ஒரே இன்னிங்ஸில் சதமடித்தது, கடந்த 15 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும்.



## புதுக்குடியிருப்பில் நடந்த மகளிர் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி



மட்டக்களப்பு கல்வி வலயத்தின் 100 நாள் செயற்றிட்டத்தின் கீழ் மட்டக்களப்பு வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான மகளிர் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டி மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கண்ணகி மஹா வித்தியாலயத்தின் அதிபர் அ.குலேந்திரராஜா தலைமையில் வித்தியாலயத்தின் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களின் ஒருங்கமைப்பில் நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட 14, 16 மற்றும் 19 வயதுப் பிரிவுகளில் 19 அணிகள் பங்குகொண்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் அன்று (டிச. 1) மாலை நடைபெற்றன.

இச்சுற்றுப் போட்டியில் 14 வயதுப் பிரிவில் புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய அணியும், 16 வயதுப் பிரிவில் மட்டக்களப்பு மகாஜன கல்லூரி அணியும், 19 வயதுப் பிரிவில் புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய அணியும் முதலாவது இடத்தினை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்த பரிசளிப்பு நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலயக்கல்வி பணிப்பாளர் கு.சுஜாதா, சிறப்பு அதிதிகளாக கோட்ட கல்வி பணிப்பாளர், கோட்ட பாடசாலை அதிபர்களும், கௌரவ அதிதிகளாக நிகழ்வுக்கான அனுசரணையாளர்களும் கலந்து சிறப்பித்ததுடன், வெற்றியீட்டிய மாணவர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களும் சான்றிதழ்களும் அதிதிகளினால் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.







# உலக பார்வை



## புலம்பெயர்ந்தவர்களால் இந்தியாவுக்கு இவ்வருடம் 100 பில்லியன் டொலர்கள்

வெளிநாடுகளிலுள்ள இந்தியர்களால் இந்தியாவுக்கு அனுப்பப்படும் பணம் இவ்வருடம் 100 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கவுள்ளது உலக உலக வங்கி அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகில் இந்த மைல் கல்லை கடக்கும் முதலாவது நாடு இந்தியா ஆகும். அமெரிக்கா மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பலமான தொழிலாளர் சந்தை மற்றும் சம்பள உயர்வு ஆகியன இந்த அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்துள்ளது.




இவ்வருடம் வெளிநாடுகளிலுள்ள இந்தியர்களால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட பணம் 5 சதவீதத்தினால் அதிகரிகத்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது. கீழ் மட்ட மற்றும் மத்திய தர வருமானமுடைய நாடுகளுக்கு இப்பணம் முக்கியமானதாகவுள்ளது.

இந்தியாவுக்கு அடுத்ததாக, புலம்பெயர்ந்த மக்களால் அதிக பணம் பெறும் நாடுகளாக மெக்ஸிக்கோ, சீனா, எகிப்து, பிலிப்பைன்ஸ் ஆகியன உள்ளன. அண்மைய வருடங்களில், அமெரிக்கா, பிரிட்டன், சிங்கப்பூர் போன்ற அதிக வருமானம் வழங்கப்படும் நாடுகளில் சிறந்த சம்பளம் வழங்கப்படும் தொழில்களைப் பெறுவதற்காக அதிக எண்ணிக்கையான இந்தியர்கள் சென்றதால் அவர்களால் கூடுதலான பணம் அனுப்ப முடிந்துள்ளது.

## எலான் மஸ்க் நிறுவனத்தில் தட்டச்சு செய்யும் குரங்குகள்!

மூளையைக் கொண்டு கணினி இயக்கும் வகையிலான நியூராலிங்க் பரிசோதனை இன்னும் ஆறு மாதங்களில் இறுதிக்கட்டத்தை அடையும் என எலான் மஸ்க் தெரிவித்துள்ளார். மூளை - கணினியை இடைமுகம் செய்து பார்வை நகர்த்தல் மூலம் கணினியை செயல்பட வைக்கும் நோக்கத்தில் இந்த ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. அந்தவகையில், முதல்கட்டமாக குரங்குகளைக் கொண்டு இந்த சோதனை நடத்தப்படுகிறது. இதில் குரங்குகள் வீடியோ கேம் விளையாடுவது, எளிமையான முறையில் எண்களை, எழுத்துக்களை எழுத வைப்பது போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

டெக்சாஸ் மாகாணத்தின் ஆஸ்டின் பகுதியிலுள்ள நியூராலிங்க் நிறுவனத்தில் இந்த பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. எலான் மஸ்க்கின் கனவுத் திட்டங்களில் ஒன்றாக மூளையின் கட்டளைகளைக் கொண்டு கணினியை இயக்குவது உள்ளது. பலகட்ட சோதனைகளின் மூலம் தற்போது குரங்குகளைக் கொண்டு இந்த சோதனை நடத்தப்படுகிறது. அதாவது குரங்கின் மூளை சொல்லும் உத்தரவுக்கு ஏற்ப கணினித் திரை செயல்படும். இந்த ஆராய்ச்சிக்கு அமெரிக்கா ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த ஆராய்ச்சியின் விளக்கக் கூட்டத்தில் பங்கேற்று பேசிய எலான் மஸ்க், அடுத்த ஆறு மாதங்களில் பரிசோதனை முயற்சியாக முதல் மனித மூளையில் இந்த நியூராலிங்க் பொருத்தும் பணிகள் தொடங்கப்படும். அதற்கான தரவு சேகரிப்புப் பணிகள் முடிவடைந்துள்ளன. முதல் மனிதனுக்கு இந்த சோதனையை செய்வதற்கு முன்பு நாங்கள் முழுக்க தயாராக வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக உள்ளோம் எனக் குறிப்பிட்டார்.



## யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்காக புட்டினை சந்திக்க தயார்– பைடன்

உக்ரைன் யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்காக ரஸ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்திக்க தயார் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். புட்டின் யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்கு ஆர்வமாகயிருந்தால் தான் அவரை சந்திக்க தயார் என தெரிவித்துள்ள பைடன் ஆனால் புட்டின் இதுவரை அவ்வாறு நடந்துகொள்ளவில்லை என குறிப்பிட்டுள்ளார்.



பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனை சந்தித்த பின்னர் அவருடன் இணைந்து செய்தியாளர்களை சந்தித்தவேளை பைடன் இதனை தெரிவித்துள்ளார்.

ரஸ்யாவின் யுத்தத்திற்கு எதிராக தொடர்ந்தும் இணைந்திருக்கப்போவதாக இரு தலைவர்களும் தெரிவித்துள்ளனர். ஏற்றுக்கொள்ள முடியாத சமரசத்திற்கு இணங்குமாறு உக்ரைனை கேட்டுக்கொள்ளப்போவதில்லை என பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## தென் ஆபிரிக்க அதிகாரிகளுக்கு லஞ்சம்

தென் ஆபிரிக்க அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்கப்பட்ட விவகாரம் தொடர்பில், சுவீடிஷ்- சுவிஸ் பொறியியல் நிறுவனமான ஏபிபி நிறுவனத்துககு சுவிட்ஸலாந்து 43 லட்சம் அமெரிக்க டொலர் அபராதம் விதித்துள்ளது. தென் ஆபிரிக்காவின் ஜொஹான்னஸ்பேர்க் நகருக்கு அருகில், குசைல் மின்நிலையம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. உலகின் 4 ஆவது மிகப் பெரிய அனல் மின்நிலையமான இம்மின்நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இம்மின்நிலைய நிர்மாணம் தொடர்பில் லஞ்சம் வழங்கப்படுவதை தடுக்கத் தவறியதாக, சுவிட்ஸர்லாந்தில் தலைமையகத்தைக் கொண்ட ஏபிபி நிறுவனம் ஒப்புக்கொண்டது என சுவிட்ஸர்லாந்து சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதையடுத்து அந்நிறுவனதுக்கு 4 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் (சுமார் 4.3 மில்லியன் அமெரிக்க டொலர்) அபராதம் விதிக்கப்பட்டதாகவும், விசாரணைகளுக்கான செலவாக 50,000 சுவிஸ் பிராங்குகள் செலுத்த உத்தரவிடப்பட்டதாகவும் சுவிஸ் சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## 3 மாதங்களில் 17 லட்சம் யூடியூப் வீடியோக்கள் நீக்கம்

ஜூலை - செப்டம்பர் காலாண்டில் யூடியூப் நிறுவனத்தின் சமூக வழிகாட்டுதல் விதிமுறைகளை மீறியதாக இந்தியாவிலிருந்து பதிவேற்றப்பட்ட 17 லட்சம் வீடியோக்கள் யூடியூப்பிலிருந்து நீக்கப்பட்டதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.




2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான யூடியூப் சமூக வழிகாட்டுதல் விதிமுறைகள் அமலாக்கம் பற்றி அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது

'சமூக வழிகாட்டுதல் விதிமுறைகளை மீறியதாக உலகம் முழுவதும் 56 லட்சம் வீடியோக்கள் யூடியூப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன. அதில் 17 லட்சம் வீடியோக்கள் இந்தியாவிலிருந்து பதிவேற்றப்பட்டவை. நீக்கப்பட்ட வீடியோக்களில் 36 சதவீதம் யாரும் பார்ப்பதற்கு முன்னரும், 31சதவீதம் 10 பார்வையாளர்களைக் கடப்பதற்கு முன்னரும் கண்டறியப்பட்டவை.

மேலும், விதிமுறைகளை மீறியதாக யூடியூப் வீடியோக்களில் பதிவிட்ட 73.7 கோடி கருத்துகள் நீக்கப்பட்டிருக்கின்றன. 99 சதவீதம் கருத்துகள் நிறுவனத்தின் தொழில்நுட்பத்தால் கண்டறியப்பட்டவை. மீதி ஒரு சதவீதம் கருத்துகள் மட்டுமே பயனர்களால் புகாரளிக்கப்பட்டு நீக்கப்பட்டன' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சொந்த விண்வெளி நிலையத்துக்கு வீரர்களை அனுப்பிய சீனா

சீனா சொந்தமாக நிறுவி வரும் தியாங்காங் விண்வெளி நிலையத்துக்கு 3 விண்வெளி வீரர்களை அந்த நாடு வெற்றிகரமாக செவ்வாய்க்கிழமை விண்ணில் செலுத்தியது. ஃபேய் ஜன்லாங், டெங் கிங்மிங், ஷாங் லூ ஆகிய 3 வீரர்களை ஏற்றிக்கொண்டு, ஷென்ஷாவ்-15 விண்கலம் லாங் மார்ச்-2 எஃப் ஓய்15 ராக்கெட் மூலம் அந்த விண்கலம் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது.



அந்த விண்கலம் புதிய வீரர்களை ஆய்வு நிலையத்தில் விட்டுவிட்டு, 5 நாள்களுக்குப் பிறகு அங்கு ஏற்கெனவே உள்ள 3 விண்கல வீரர்களை ஏற்றிக்கொண்டு பூமி திரும்பவிருக்கிறது. சீன விண்வெளி ஆய்வு வரலாற்றில் வீரர்கள் மாற்றிக்கொள்ளப்படுவது இதுவே முதல்முறையாகும். தனக்கென்று சொந்தமாக சீனா அமைத்து வரும் வரும் தியாங்காங் விண்வெளி நிலையம், இந்த ஆண்டு இறுதிக்குள் அது செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐஎஸ் அமைப்பின் நெய்ல் பிரகாஸ் துருக்கியிலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு நாடு கடத்தப்பட்டார்

துருக்கியிலிருந்து நாடு கடத்தப்பட்ட ஐஎஸ் அமைப்பை சேர்ந்த நெய்ல் பிரகாசை அதிகாரிகள் இன்று டார்வின் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். நெய்ல் பிரகாசிற்கு எதிராக அதிகாரிகள் ஆறு குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர். ரப் கலைஞரான 31 வயது நெய்ல் பிரகாஸ் 2014 இல் ஐஎஸ் அமைப்புடன் இணைந்தார்.2016 இல் மோதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக இவர் சிரியா சென்றார் என்ற குற்றச்சாட்டும் உள்ளது. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் பிரகாசிற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம்.

இதேவேளை நெய்ல் பிரகாசை ஒன்பதாம் திகதிக்கு முன்னர் நொதேர்ன் டெரிட்டரியிலிருந்து விக்டோரியாவிற்கு மாற்றுவதற்கு நீதிபதி அனுமதி வழங்கியுள்ளார். விக்டோரியா காவல்துறையினர் நெய்ல் பிரகாசை மெல்பேர்னிற்கு கொண்டு செல்வதற்கு முன்னர் அவர் தொடர்ந்தும் டார்வினில் தடுத்துவைக்கப்படுவார்.

பால்மேர்ஸ்டன் கண்காணிப்பு இல்லத்திலிருந்து வீடியோவில் தோன்றிய நெய்ல்பிரகாஸ் விசாரணையின் போது கைகள் பிணைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டார்.

தனது சார்பில் எவரும் வாதிடுவதை விரும்பாத அவர் தனது அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு நீதிபதி வேண்டுகோள் விடுத்த வேளை அமைதியாக காணப்பட்டார். தழும்புகள் மற்றும் டட்டுக்கள் மூலம் நெய்ல் பிரகாசை அடையாளம் கண்டுள்ளதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.




























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 04.12.2022 அன்று வெளியிடப்பட்டது.